Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை: ரூபா 8.00

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பி
மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கு
20% விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS DIVISION 2005

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 22 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 05 (08.11.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:39

## தொடரும் கடும் மழையால் இயல்புவாழ்க்கை பாதிப்பு!

யாழ்ப்பாணம் —

கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும் மழை அடுத்த 24 மணிநேரத்துக்கு தொடரும் வாய்ப்பிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு அருகே நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழமுக்கம் காரணமாகவே நாடு முழுவதும் பரவலாக கடும் மழை பெய்துவருகின்றது. அடுத்த 24 மணிநேரத்துக்கு இந்த மழை நீடிக்க வாய்ப்புள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் கடும் மழையும், இடி மின்னலின் தாக்கமும் அதிகமாக இருக்கும் என்றும் பொது மக்கள் அவதானமாக இருக்கும்படியும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூலமான வாக்களிப்பு; பெருமளவானோர் புறக்கணிப்பு



இராணுவத் தலைமையகத்தில் வாக்களிக்கும் படையினர்!


யாழ்ப்பாணம் —

ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்றபோதும் - யாழ். குடாநாட்டில் பெருமளவான அரச உத்தியோகத்தர்கள் இதில் பங்கேற்காமல் புறக்கணிப்பில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

தபால் மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்ற நிலையில் - இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்குமாறு கோரி பல்வேறு பொது அமைப்புக்களும் அழைப்பு விடுத்திருந்தன.

இந்த அழைப்பை ஏற்றே பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் வாக்களிப்பில் பங்கேற்காமல் புறக்கணிப்பில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)


## நட்வர்சிங் பதவி நீக்கம்!



புதுடெல்கி —

இந்திய வெளியுறவு அமைச்சர் பதவியிலிருந்து நட்வர்சிங் நீக்கப்பட்டதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. உணவுக்கு எண்ணெய் வழங்கும் திட்டத்தில் ஈராக் ஜனாதிபதி சதாம்ஹூசைனுடன் தொடர்புகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகியதாலேயே நட்வர்சிங்கின் வெளியுறவு அமைச்சர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆதரவை விலக்கிக்கொள்ள நேரிடும்; ரணிலுக்கு சந்திரசேகரன் எச்சரிக்கை!



கொழும்பு —

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைக்க வடக்கு - கிழக்கில் இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணைப்படைகளைப் பயன்படுத்துவது மற்றும் வெளிநாட்டுப் படைகளைப் பயன்படுத்த ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க சதித் திட்டம் தீட்டியுள்ளதாக வெளியான தகவல் குறித்து உரிய விளக்கமளிக்காவிடின்-

தமது ஆதரவை விலக்கிக்கொள்ள நேரிடும் என மலையக மக்கள் முன்னணி எச்சரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சமாதானப் பேச்சுக்கள் என்ற பெயரில் ரணில் விக்கிரம சிங்க செயற்படுத்திவரும் சதித் திட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திசநாயக்க அம்பலப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

வடக்கு - கிழக்கில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்கொலை!

அம்பாறை —

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று மாலை கூலித் தொழிலாளியான வேலாயுதம் ஞானசேகரம் (வயது - 40) என்பவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

மேசன் கூலித் தொழிலாளியான அவர் தொழில் முடிந்து சாகாமம் வீதி வழியாக வீட்டிற்கு திரும்பிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுடப்பட்டு காயம்!

திருகோணமலை —

திருகோணமலை - அபயபுரச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கந்தானையைச் சேர்ந்த அபுசாலி மொகமட் இஸ்மத் (வயது 20) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். விற்பனைப் பிரதிநிதியான (12 ஆம் பக்கம் பார்க்க)

# தம்மிடமுள்ள ஆயுதக்குழுவினர் மூலமே படையினர் தாக்குதலை நடத்துகின்றனர்!

## புலிகளிடம் சரணடைந்த இளைஞர்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு —

தமிழ்மக்கள் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை இராணுவத்தினர் தம்முடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழு மூலமே நடத்திவரும் விடயத்தை விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த மூன்று இளைஞர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

கறுப்பாளையைச் சேர்ந்த சுந்தரம் சுரேஸ் (வயது 16), மாங்கேணி மதுரங்குளத்தைச் சேர்ந்த செல்வம் பாபு (வயது 15), கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சண்முகம் சர்வராஜா (வயது 21) ஆகிய மூவருமே புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த அந்த மூன்று இளைஞர்களும் கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)



சுரேஸ் பாபு சர்வராசா

## வரவு - செலவுத் திட்டம் இன்று; ஐ.தே.க. எதிர்ப்பதாக அறிவிப்பு!

கொழும்பு —

நாட்டில் எட்டு வீத பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்த பொருளாதாரக் கொள்கையின் மற்றுமொரு நடவடிக்கையாக இன்றைய வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படுகிறது.



இந்தக் கொள்கையில் இரண்டு பிரதான நோக்கங்கள் உள்ளன. இவை அபிவிருத்தியை அதிகரிப்பது, (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐஸ் மஞ்சுவின் சகா திருமலையில் கைது!

கொழும்பு —

இராணுவப் புலனாய்வு அதிகாரி கேணல் றிஸ்வி மீடின் படுகொலை தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரான ஐஸ் மஞ்சுவின் நெருங்கிய சகா ஒருவரைக் கைதுசெய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவர் எனத் தாம் சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மீடின் கொலை தொடர்பாக திருகோணமலையில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிலர் மீனவ உபகரண வியாபர நிலையங்களின் உரிமையாளர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வு அதிகாரி மீடினை படு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை, உயிலங்குளம் ஊடாக 16 ஆம், 17 ஆம் திகதிகளில் போக்குவரத்துக்கு கட்டுப்பாடு!


வவுனியா —

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி இரு தினங்கள் ஓமந்தை, உயிலங்குளம் சோதனைச் சாவடியூடாகப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் போக்குவரத்தைத் தடை செய்வதற்கும், பயணிகள் போக்குவரத்தைக் மட்டுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை வவுனியா செயலகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில்- வன்னி மாவட்டத்தின் இராணுவம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், வவுனியா அரச அதிபர் சி.சண்முகம், பிரதேச செயலர்கள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் எதிர்வரும் ஜனாதிபதித் (12 ஆம் பக்கம் பார்க்க)



கந்தசஷ்டி விரதத்தின் இறுதிநாளான சூரசங்காரம் நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்றபோது - முருகப்பெருமான் சூரசங்காரத்துக்காக எழுந்தருளி வருவதையும், முருகப்பெருமானை எதிர்த்து சூரன் போர்செய்வதையும், அங்கு திரண்டிருந்த அடியார்களையும் படங்களில் காணலாம்.

### மூன்று கோரிக்கைகளை முன்வைத்து

## முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள் நேற்று விரிவுரைகளை பகிஷ்கரித்தனர்!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்று விரிவுரைகளை பகிஷ்கரித்தனர்.

மாணவர்களுக்கான செயன்முறைப் பயிற்சியை ஒழுங்குபடுத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் பின்னடித்துவருகின்றது. மாணவர்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ,

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் பல்கலைக்கழக நிர்வாகம் காட்டிவரும் அசமந்தப்போக்கு ஆகியவற்றைக் கண்டித்தே தமது விரிவுரைகளை மாணவர்கள்பகிஷ்கரித்தனர்.

தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் பொருத்தமான நடவடிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாகம் எடுப்பதற்கு காலம் தாழ்த்தினால் தொடர்ச்சியாக விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் தெரிவித்தனர்.

## பாம்பு கடித்து குழந்தை பரிதாப மரணம்

யாழ்ப்பாணம் —

நேற்று அதிகாலை உறக்கத்திலிருந்த வேளை - பாம்புக் கடிக்கு இலக்கான குழந்தை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தது.

உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த முருகையா நுமிகா (வயது 3 1/2) என்ற குழந்தையே பாம்பு தீண்டிப் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணிக்கு நடைபெற்றது. குறித்த குழந்தை உறங்கிக் கொண்டிருந்த போது பாம்பு தீண்டியதும் குழந்தை அழத் தொடங்கியது.

குழந்தைக்கு பாம்பு தீண்டியதை உணராத பெற்றோர் பார்வை பார்ப்பதற்காக மந்திரவாதியிடம் சென்றதும் பாம்பு தீண்டியமை தெரிந்தது.

மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுப் பின்னர் - யாழ்.போதனாவைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக எடுத்துச் செல்லும் வழியில் சிறுமி உயிரிழந்தார். உயிரிழந்த சிறுமியின் சடலம் விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## மோட்டார் திணைக்களத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு - மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் செயற்பாடுகள் நாளை முதல் நடைபெறமாட்டாது என யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை - சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காகச் செயன்முறைப்பரீட்சை, எழுத்துப்பரீட்சை ஆகியவற்றுக்கு திகதி பெற்ற பரீட்சார்த்திகளுக்கு அந்தப் பரீட்சைகள் வழங்கப்பட்ட திகதிகளில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படு கிறது.

## மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் வலது கால் பாதத்தை இழந்தார்!

யாழ்ப்பாணம் —

சுழிபுரம் பகுதியில் காணி துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலது கால் பாதத்தை இழந்தார்.

நேற்று மாலை சுழிபுரம் மேற்கு பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த என்.சுப்பிரமணியம் (வயது 30) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவார்.

புதிதாக வாங்கிய தனது காணியை துப்புரவு செய்து கொண்டிருந்த வேளை - புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் இவரது வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டது. காயங்களுக்குள்ளான நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

எனினும், இவரது வலது காலில் ஏற்பட்ட பலத்த காயங்களால் இறுதி நேரத்தில் கால் பாதம்வரை துண்டிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மஜிக் பென்சில் கண்காட்சி

யாழ்ப்பாணம் —

பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனம் நடத்தும் சிறுவர்களுக்கான மஜிக் பென்சில் மூன்று நாள் கண்காட்சி நிகழ்வு இன்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி மாலை 5 மணி வரை தொடர்ந்தும் நடைபெறவுள்ளது.

### நிகொட் நிறுவன உதவியுடன்

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பு!

யாழ்ப்பாணம் —

நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சாவகச்சேரி நகர வைத்தியசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நிகொட் உதவியுடன் சாவகச்சேரி மருத்துவமனைக்கு இந்த இரண்டு மாடிக் கட்டடத்துடன் தண்ணீர்த் தாங்கி, வெளிநோயாளர் பகுதிக்கான கட்டடம் ஆகியவையும் அமைக்கப்படவுள்ளன.

இவற்றினை அமைப்பதற்கு ஒப்பந்தக்காரர்களிடம் கேள்வி கோரப்படுவதற்கு தற்போது மதிப்பீட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. எனவே, விரைவில் கட்டடம் அமைக்கும் பணி கள் ஆரம்பமாகும்.

சாவகச்சேரி மருத்துவமனை கடந்த காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின்போது - சேதமடைந்து கட்டட வசதியீனங்களின் மத்தியிலும் மக்களுக்குச் சேவை யாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம் —

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் 111 ஆவது ஆண்டு நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஒறேற்றர் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறை விரிவுரையாளர் பேராசிரியர் வி.நித்தியானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் என்.சிவசண்முகராஜ் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

## முகாமைத்துவமாணி கற்கைக்கான நுழைவுப் பரீட்சையில் 7 பேர் சித்தி!

யாழ்ப்பாணம் —

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் முகாமைத்துவமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நடத்தப்பட்ட நுழைவுப் பரீட்சையில் 7 பேர் சித்தியடைந்துள்ளனர்.

முகாமைத்துவ கற்கை நெறிக்கு விண்ணப்பித்த 48 பேரில் ஏழு பேர் மட்டுமே சித்தியடைந்தனர்.

என்.கருணாராஜ், எஸ்.அருள்சோதி, ரி.ஜெகதீவரன், எஸ்.அந்தோணிப்பிள்ளை, ரி.நரேந்திரன், பி.சீராளன், செல்வி இசற். கணேஸ்வரன் ஆகியோரே சித்தியடைந்ததாக யாழ். பிராந்திய நிலையத்தின் இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரா தெரிவித்துள்ளார்.

## வடமராட்சி விவசாயிகளுக்கு விவசாய உபகரணம் வழங்கல்!

வடமராட்சி —

வேல்ட் விஷன் நிறுவனம் வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை இன்று வழங்கவுள்ளது.

இன்று காலை 11 மணிக்கு வியாபாரிமூலையில் வைத்து - வியாபாரி மூலை, புலோலிமத்தி, புலோலி மேற்கு ஆகிய விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மாலை 4 மணிக்கு அல்வாய் வடமேற்கில் வைத்து - பொலிகண்டி கிழக்கு, அல்வாய் வடமத்தி, அல்வாய் வடமேற்கு, அல்வாய் மேற்கு ஆகிய பகுதி விவசாய அமைப்புக்கள் ஊடாக விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக மேற்படி நிறுவனத்தின் வெளிக்கள அலுவலர் தெரிவித்தார்.

## போக்குவரத்து விதிகளை மீறிய 11 பேருக்கு 39 ஆயிரம் அபராதம்!

யாழ்ப்பாணம் —

போக்குவரத்து விதிகளை மீறிய பதினொரு நபர்களுக்கு 39 ஆயிரம் ரூபா குற்றப்பணமாகச் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிபதி சிறிநிதி நந்தசேகரம்உத்தரவிட்டார்.

காப்புறுதிப் பத்திரம் இல்லாமை, வருமான வரிப்பத்திரம் இல்லாமை, விபத்துக்கு காரணமாக இருந்தமை, வாகனங்களுக்கு இடையூறாக வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை, பின்னால் ஏற்றிச் சென்றவர் தலைக்கவசம் அணியாமை ஆகிய குற்றங்களை செய்த மேற்படி பதினொரு நபர்களையும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இவர்கள் தம் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குற்றப்பணம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மோட்டார் சைக்கிளில் பின்னால் தலைக்கவசம் அணியாமல் இருந்தவர்களை ஏற்றிச் சென்ற இரண்டு சாரதிகளுக்கு தலைக்கவசம் அணியாத வரை பின்னால் ஏற்றிச் செல்ல மாட்டேன் என்ற வாசகம் ஆயிரம் தடவை எழுதிக் காட்டுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் அலுவலகம் திறப்பு!

யாழ்ப்பாணம் —

அரசியல் அமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சும் யு.என்.டி.பியும் இணைந்து உருவாக்கிய நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் பதின்மூன்றாவது கருமபீடம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று 2.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

சட்டத்தரணி நிறஞ்சன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில்- யு.என்.டி.பி நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் டொக்டர் பிரெட்டின் அபயரெத்தின பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன், யு.என்.டி.பியின் தேசிய திட்ட இணைப்பாளர் திருமதி. விவேக சிறிவர்த்தன, யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.


மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
சிவகாசி
விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், ஆர்த்தி அகர்வால், நமீதா, வடிவேலு நடித்த
பம்பரக்கண்ணாலே
காட்சிகள்:-11.00.3.00.7.00, 9.30, 1.00 (பு.நே)




நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் புகழ் ரவி, ஸ்ரேயா நடித்த
மழை
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
விசேட காட்சியாக ரஜனி, சிவாஜி, அம்பிகா நடித்த
படிக்காதவன் 9.00 மணி (பு.நே)

சிறு விளம்பரம்
வீடு விற்பனைக்கு
கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் போரூட் அலுவலகத்துக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய நவீன மயப்படுத்தப்பட்ட வீடும், ஒரு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : T.P - 222 7286 (2108)

# ரணில் மீதான ஊழல் குற்றச்சாட்டை லஞ்ச ஊழல் ஆணைக்குழு நிராகரிப்பு!



கொழும்பு —

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டிய தேவையில்லையென லஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் கணினிக் கொள்வனவில் ஊழல் நடைபெற்றதாக ஆணைக்குழுவிடம் துறைமுக அமைச்சர் மங்கள சமரவீர முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாடு தொடர்பாக கடந்தவாரம் ஆணைக்குழு ஆராய்ந்தது.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவர் அமீர் இஸ்மாயில் கூறியுள்ளதாவது -

மங்கள சமரவீர தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமில்லாதவை. ரணில் பிரதமராக இருந்தபோது அமைச்சரவையும் திறைசேரியும் ஒப்புதல் அளித்த பின்னர்தான் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையில், அது தொடர்பாக மேலதிக விசாரணைகள் தேவையில்லை. முறைப்பாடு செய்துள்ள மங்கள சமரவீரவுக்கு எமது பதில் அனுப்பி வைக்கப்படும்.

அதே நேரத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது அம்பாந்தோட்டை சுனாமி நிவாரண நிதி மோசடிகள் மீதான விசாரணைகள் தொடரும். இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சாகல ரட்ணாயக்க முறைப்பாடு செய்திருந்தார். சில நாட்களுக்கு முன்னராக அவரது வாக்கு மூலத்தை நாம் பதிவு செய்தோம். அவர் கையளித்துள்ள ஆவணங்களை ஆராயவுள்ளோம்.

சுனாமி நிவாரண நிதி மோசடிகள் தொடர்பாக குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவை உயர் நீதிமன்றம் மூலம் மகிந்த ராஜபக்ஷ பெற்றுள்ளார். லஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவும் தன் மீதான விசாரணைகளை நிறுத்தி வைக்க வேண்டுமென்று மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், உயர்நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவு எம்மை கட்டுப்படுத்தாது. எமது ஆணைக்குழு இந்த வழக்கின் விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளும் என்றும் அமீர் இஸ்மாயில் கூறியுள்ளார்.

# தேர்தல் முடிவை அறிவிப்பதில் புதிய நடைமுறைகள் உருவாகும்

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை அறிவிக்கும்போது, வேட்பாளர்கள் பெற்றுக்கொள்ளும் வாக்கின் அளவின் நூற்றுவீதத்தையும், வெளியிடுவது தொடர்பாக தேர்தல் திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாக உதவித் தேர்தல் ஆணையாளர் ரசிக பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவினருடன் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. 25 தேர்தல் தொகுதிகளின் முடிவுகளை வெளியிடுவதில் தொடங்கி, சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அளவுக்கேற்ப நூற்றுவீதத்தை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த முடிவு அடுத்த வாரமளவில் எடுக்கப்படும். தேர்தல் முடிவுகளுடன் நூற்றுவீதத்தையும் வெளியிடுவது இதற்கு முன்னர் இடம்பெறவில்லை. இந்த நடைமுறை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மேற்கொள்வது தொடர்பாக கவனமெடுக்கப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# நேரடி விவாதத்துக்கான அழைப்பை ஏற்றுக்கொண்டார் பிரதமர் மகிந்த!



கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடனான தொலைக்காட்சி விவாதத்துக்குத் தாம் தயார் என்று சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

புளத்சிங்களவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ பேசும்போதே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

எம்மை தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்துள்ளார். அவரது சவாலை நாம் ஏற்கிறோம். அவரை எதிர்கொள்ள நாம் தயார். நாம் அந்த விவாதத்தில் கலந்துகொண்டால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலாங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளுடனான தமது ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்த ரணில் ஒப்புக்கொண்டுள்ளார்.

அவர்களது ஒப்பந்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஒப்பந்தம் குறித்து எதுவும் பேசவில்லை. ஆனால், அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதை நாடு நன்கறியும்.

ரணில் எந்த இடத்தில் நேரடி விவாதத்துக்கு அழைக்கிறாரோ அங்கு நாம் பங்கேற்கத் தயார். டெடிகம, காலி, கோட்டை அல்லது பட்டலந்த எங்கு ரணில் அழைத்தாலும் நாம் பங்கேற்கத் தயார். நாம் அஞ்சவில்லை. குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் உருவாக்கப்பட்ட அந்த ரகசிய ஒப்பந்தத்தை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக நாம் அந்த விவாதத்துக்குத் தயாராக இருக்கிறோம் என மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வெற்றி? இந்துஸ்தான் ரைம்ஸ் கணிப்பீடு!

கொழும்பு —


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, குருநாகல், கேகாலை மற்றும் மொனராகல ஆகிய மாவட்டங்களில் முன்னிலை பெறுவதுடன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - கண்டி, நுவரெலியா, புத்தளம், கொழும்பு, அனுராதபுரம், பொலனறுவ, பதுளை மற்றும் இரத்தினபுரியில் முன்னிலை பெறுவார் என ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதனைவிட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னிலையில் உள்ளார் எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

(தே)

# அமைதிப் பேச்சுக்களின் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து



கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு - தீவிரவாதிகளின் கைகளுக்குச் செல்லாமல் அமைதிப் பேச்சுகள் மூலமே தீர்வு காணவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

பெரதேனியாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியின் 75 வீதமான வாக்குகள் இனப்பிரச்சினைக்கு அமைதி முயற்சிகள் மூலமான தீர்வு காண்பதற்காகவே கிடைக்கும்.

ஹிட்லரைப் போல் இந்த நாட்டிலுள்ள தீவிரவாதிகள் நாட்டை அழித்துவிடுவார்கள். தீவிரவாதிகளின் தலையீடு இல்லாமல் அமைதி முயற்சிகள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். எதிர்க்கட்சித் தலைவராக உள்ளவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆசைப்படுகிறார். நாம் இன்னமும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை அகற்ற ஆதரவளிக்கிறோம். 1995 ஆம் ஆண்டு ஒகஸ்டில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாத காரணத்தால் எம்மால் அதைச் செய்ய முடியவில்லை.

கீழ்த்தரமாக எழுதுகிற ஊடகத்தாரை சிறையில் தள்ளியிருக்கவேண்டும். அல்லது சிலர் செய்வதைப்போல் கொலை செய்திருக்க வேண்டும். ஆனால், நாம் அதை எப்போதும் செய்யப்போவதில்லை. சுகாதார சேவையில் புதிய செயற்திட்டங்களைச் செயற்படுத்த சுகாதார சேவையாளர்களின் தொழிற்சங்கங்கள் தடையாக உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பல மீட்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகருக்கு வெளியே சின்ன ஊறணியில் கைவிடப்பட்ட வீடொன்றுக்குள் இருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்டன.

அந்தப் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது இவை கண்டெடுக்கப்பட்டதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

கைக்குண்டுகள் - 02, ரி - 56 ரக துப்பாக்கி - 01, அதற்கான ரவைகள் மற்றும் மகசீன்கள், கிளைமோர் குண்டு - 01, வெடிக்க வைக்கும் கருவி - 01, வயர் ரோல் - 01 ஆகியன கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, வாழைச்சேனை பிரதேசத்தில் செம்மன்னோடையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவமொன்றில் முஸ்லிம் இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றின் கூரை மேல் சந்தேகத்துக்கிடமான நபரொருவரின் நடமாட்டத்தை அவதானித்து 'திருடன் திருடன்' எனக் கூக்குரலிட்டபோது - அந்த நபரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். துப்பாக்கிச்சூடு நடத்தியவர் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.கவுடன் இரகசிய ஒப்பந்தம்? இ.தொ.காவும், மு.காவும் மறுப்பு!

கொழும்பு —

ஜனாதிபதி தேர்தல் ஆதரவு வழங்குவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன், எமது கட்சிகள் எந்தவித இரகசிய ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளவில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன மறுத்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி மற்றும் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஆர்.யோகராஜன் ஆகியோர் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ஆர். யோகராஜன் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையில் பணக்காரக் கட்சி ஜே.வி.பிதான். வெளிநாடுகளின் கம்யூனிச அமைப்புகளிடமிருந்து அந்தக் கட்சிக்கு பணம் வருகிறது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியை அது வெளிநாட்டு சக்திகளின் கட்சியாக சித்திரிக்கிறது.

ஜே.வி.பியினர் முதலில் தம்மைப் பார்த்துக்கொள்ள வேண்டும். மலையக மக்களின் நலனுக்காகத்தான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நிபந்தனையுடனான ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதே தவிர, ஜே.வி.பி கூறுவதுபோல் தனி அலகை நாம் கோரவில்லை.


இனப்பிரச்சினைக்கு இந்திய கூட்டாட்சி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண வேண்டும் என்பதுதான் இ.தொ.காவின் நிலை என்றார் யோகராஜன்.

இது குறித்து ஹசன் அலி கூறுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியுடனான ஒப்பந்த விபரங்களை நாம் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளோம். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவைகளே ஒப்பந்தத்தில் உள்ளவை என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலே வெற்றி பெறுவார்!

## எஸ்.பி. திஸநாயக்க தெரிவிப்பு



கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவாரென சிறைவாசம் அனுபவித்துவரும் ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாட்டில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைக்கு அமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்படப்போகின்ற தோல்வியை எவராலும் தடுக்கமுடியாததைப் போலவே ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதியாவதையும் எவராலும் தடுக்கமுடியாது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி-ஜே.வி.பியுடன் கூட்டணி ஒன்றை ஏற்படுத்தி நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகத்தை கலாசார ரீதியாக பாதாளத்துக்கு கொண்டு சென்றுள்ளதுடன் வடக்கில் விடுதலைப் புலிகளின் பிரச்சினையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

எனவே, மேற்படி பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை வழங்கி நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தே)

# நியூஸிலாந்துடனான ஒருநாள் தொடரை முழுமையாக வென்றது தென்னாபிரிக்கா!



செஞ்சூரியன் —

தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் 5ஆவது சர்வதேச ஒருநாள் போட்டி நேற்றுமுன் தினம் செஞ்சூரியனில் நடைபெற்றது. இதில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்தைத் தோற்கடித்து 5 போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனையடுத்து நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. இதில் ஆரம்ப வீரர்களாக அணித் தலைவர் பிளெமிங்கும், அஸ்ரிலும் களமிறங்கினர். ஆனால் அணி ஓட்டமெதையும் பெறாமலேயே பிளெமிங், பொலக்கின் பந்தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து டக் அவுட்டாகி வெளியேறினார்.

இதனையடுத்து அஸ்ரிலுடன் வின்சென்ட் இணைந்தார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 43 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த அஸ்ரிலின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இதன்பின் மார்ஷல் இணைந்தார். ஆனால், அவரும் 3 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப, பின்னர்வந்த வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை நியூஸிலாந்து அணி பெற்றது.

இதில் ஸ்ரைரிஸ் 19, மக்மிலன் 9, மக்கலம் 27, விற்றோரி 0, பிராங்ளின் 12, மில்ஸ் 19 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தனர். பொண்ட் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் அன்ட்ரூ ஹோல் 4, லாங்வெல்ட் 2, பொலக், என்ரினி மற்றும் நெல் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 216 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென களமிறங்கியது தென்னாபிரிக்க அணி. இதில் சிமித் மற்றும் டி-வில்லியர்ஸ் ஆரம்ப வீரர்களாக இறங்கினர். இதில் சிமித் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தார். எனினும், டி-வில்



லியர்ஸ் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார்.

இதன்பின் கலிஸ் இணைந்தார். ஆனால், அணி 103 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 65 பந்துகளில் 13 பவுண்டரிகள் அடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிமித் ஆட்டமிழக்க, பிறின்ஸ் வந்தார். ஆனால், கலிஸ் 15, பின்னர் வந்த மோர்க்கல் 5, பிறின்ஸ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எனினும், பௌச்சர் - கெம்ப் ஜோடி ஆட்டமிழக்காமல் முறையே 22, 1 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 28.1 ஓவரில் மழை குறுக்கிட்டது.

இவ்வேளை - தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றதனால் -



டக்வேர்த் லூயிஸ் முறைப்படி அவ்வணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பந்துவீச்சில் விற்றோரி 2, மில்ஸ், பிராங்ளின் மற்றும் ஸ்ரைரிஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இரு அணிகளுக்குமிடையே 5 போட்டிகள் கொண்ட தொடரில் 4ஆவது போட்டி மழை காரணமாக ரத்துச் செய்யப்பட்ட நிலையில் மற்றைய 4 போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வென்றுள்ளது.

# கோர்சிகா செஸ் போட்டி; ஆனந்த் அதிர்ச்சித் தோல்வி!


பிரான்ஸ் —

பிரான்ஸில் பாஸ்டியா நகரில் நடைபெற்ற கோர்சிகா செஸ் போட்டியில் சுவிற்சர்லாந்து கிராண்ட் மாஸ்டர் வேதிம் மிலாவிடம் அதிர்ச்சித் தோல்வியுற்றார் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்.

இதையடுத்து, தொடர்ந்து 6ஆவது முறையாக சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்தார் கிராண்ட் மாஸ்டர் ஆனந்த். 2000 முதல் 2004ஆம் ஆண்டுவரை தொடர்ந்து இந்தப் போட்டியில் ஆனந்த் பட்டத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராபிட் நொக் அவுட் முறையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் ஒவ்வொரு சுற்றிலும் ஒருவர் மற்றொருவருடன் 2 முறை விளையாடவேண்டும். அதில் சமநிலை காணும் பட்சத்தில் டை-பிரேக்கரில் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படும்.

முதல் சுற்றில் மிலாவும், 2ஆவது சுற்றில் ஆனந்தும் வெற்றிபெற்றதால் டை-பிரேக்கரில் சம்பியன் யார் என்பது தீர்மானிக்கப்பட்டது. அதில்,




மிலாவ் வெற்றிபெற்று பட்டத்துக்கு உரியவரானார்.

உலக செஸ் தரவரிசையில் ஆனந்தைக் காட்டிலும் மிலாவ் மிகவும் பின்னடைவு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிலாவுக்கு ரூ. 8 லட்சம் பரிசு கிடைத்தது. இரண்டாம் இடத்தைப் பிடித்த ஆனந்துக்கு 5 லட்சம் கிடைத்தது.

# இலங்கையுடனான அடுத்த போட்டிகளிலும் கங்கூலிக்கு இடமில்லை, கைவ் சேர்ப்பு!



அகமதாபாத் —

இந்திய - இலங்கை அணிகளிடையே நடைபெற்றுவரும் 7 ஒருநாள் போட்டித் தொடரில் இதுவரை 5 போட்டிகள் முடிவடைந்துள்ளன. அடுத்த 2 போட்டிகள் குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட், பரோடா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இந்த 2 போட்டிக்கான வீரர்கள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டனர். இதில் முன்னாள் கப்டன் கங்கூலி சேர்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

இந்தத் தொடரில் முதல் 2 போட்டிக்கு முன்னரே வீரர்கள் அறிவிக்கப்பட்டனர். அப்போது கங்கூலிக்கு காயம் ஏற்பட்டிருந்ததால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அடுத்த 3 போட்டிகளுக்கு வீரர்கள் அறிவிக்கப்பட்டனர். அப்போது கங்கூலியின் காயம் குணமடைந்திருந்தபோதிலும் சேர்க்க மறுத்துவிட்டனர்.

கடைசி 2 போட்டிகளிலாவது இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதிலும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

காயம் காரணமாக விளையாடாமல் இருந்த மொகமட் கைவ் குணமடைந்துவிட்டதால், அடுத்து அவர் அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். அதேபோல் புதுமுக வீரர் விக்ரம் கில் முதல் முதலாக சேர்க்கப்பட்டுள்ளார். இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே அணியில் இருந்த வேணுகோபால் ராவ், ஜே.பி.யாதவ் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அணி தேர்வு முடிவை தேர்வுக் குழுத் தலைவர் கிரண் மோரே அறிவித்தார். அவரிடம் கங்கூலியைச் சேர்ப்பது குறித்து விவாதிக்கப்பட்டதா? என்று கேட்டதற்கு எல்லா வீரர்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், ஒரு வீரரைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு கருத்துச் சொல்லமுடியாது என்றார்.

அணி விபரம் -

ராகுல் ராவிட் (கப்டன்), டெண்டுல்கர், ஷேவாக், யுவராஜ்சிங், சுரேஷ் ரெய்னா, இர்பான் பதான், மொகமட் கைவ், விக்ரம் கில், ஹர்பஜன் சிங், டோனி, அஜித் அகர்கர், முரளி கார்த்திக், ஆர்.பி.சிங், ஸ்ரீசந்த்.

# இந்திய அணியுடன் மோதவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிப்பு!



ஜொகனஸ்பேர்க் —

தென்னாபிரிக்க அணி இந்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியுடன் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதி தொடங்கவுள்ளது. சென்னையில் 28ஆம் திகதி போட்டி நடைபெறவுள்ளது.

இதற்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணி விபரம் -

சிமித் (கப்டன்), ஜோகன் போதா, பௌச்சர், வில்லியர்ஸ், ஜக் கலிஸ், ஜஸ்ரின் கெம்ப், லாங்வெல்ட், அல்பி மோர்க்கெல், அன்ட்ரூ நெல், என்ரினி, ஒன்டொங், ரொபின் பீற்றர்சன், பொலக் ஆஸ்வெல் பிறின்ஸ்.

# விளையாட்டு


# அட்லாண்டா ரெனிஸ் போட்டி; மௌரிஸ்மோ சம்பியனானார்

நியூயோர்க் —

அமெரிக்காவில் அட்லாண்டா சம்பியன் பெண்கள் ரெனிஸ் போட்டி நடைபெற்றது. இதில் இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான பிரான்ஸ் வீராங்கனை மௌரிஸ்மோ, ரஷ்ய வீராங்கனை எலீனா டெமன்டிவாவும் மோதினார்கள். இதில் மௌரிஸ்மோ 7-5, 2-6, 7-5 என்ற செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் பெற்றார்.

மௌரிஸ்மோ தொடர்ந்து 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் முன்னணி ரெனிஸ் வீராங்கனைகள் டேவன்போர்ட், ஷரபோவா ஆகியோர் காயம் மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக விளையாடவில்லை.



# பாரிஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டி; அன்டி ரொடிக் அதிர்ச்சித் தோல்வி!

பாரிஸ் —

பாரிஸ் மாஸ்டர்ஸ் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு இவான் லுபிசிக் மற்றும் டோமாஸ் பெர்டிச் இருவரும் தகுதி பெற்றனர்.

அமெரிக்க முன்னணி வீரரும் முதல்நிலை வீரருமான அன்டி ரொடிக் அரையிறுதியில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஏ.டி.பி ஆண்கள் சுற்றுப்பயணப் போட்டிகளில் ஒன்றான பாரிஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டிகள் பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸில் நடைபெறுகிறது.

முன்னணி வீரர்கள் பலர் கலந்து கொண்ட இந்த பாரிஸ் மாஸ்டர்ஸ் போட்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இதன் முதல் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்க வீரரான அன்டி ரொடிக்கும், குரோஷிய வீரர் இவான் லுபிசிக்கும் மோதினர்.

இதில் 6ஆம் நிலை வீரரான இவான் லுபிசிக் அபாரமாக ஆடி 6-3, 7-5 என்ற நேர் செட் கணக்கில் முதல் நிலை வீரரான அன்டி ரொடிக்கை அதிர்ச்சித் தோல்வியடைய வைத்தார்.

மற்றொரு அரையிறுதியில், செக். குடியரசு வீரர்களான ரேடக்ஸ் ஸ்டீபனுக்கும், டோமாஸ் பெர்டிச்சும் மோதினர்.

இதில் தகுதிநிலை பெறாத டோமாஸ்



பெர்டிச் 6-1, 3-6, 6-3 என்ற செட் கணக்கில், முன்னணி வீரரான ஸ்டீபனக்கை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

8ஆம் நிலை வீரரான ரேடக் ஸ்டீபனக் கடந்த வருடம் இங்கு நடந்த இறுதிப் போட்டியில் பங்கு கொண்டு தோல்வியடைந்தவர். தவிர, 4 முறை இங்கு இறுதிப் போட்டியில் பங்கு கொண்டவர்.

இந்த சீசனில் பெர்டிச் இரண்டாவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருக்கிறார். பஸ்டாட் நகரில் நடந்த இறுதிப் போட்டியில் பெர்டிச், 2ஆம் நிலை வீரரான ராபல் நடாலிடம் தோல்வியடைந்தார்.

பெர்டிச் இதுவரை ஒரு ஏ.டி.பி பட்டத்தை வென்றிருக்கிறார். கடந்த வருடம் பாவெர்மோவில் நடந்த போட்டியின் மூலம் இவர் அந்தப் பட்டத்தை வென்றார்.

லுபிசிக், 20 வயதான செக். குடியரசு வீரரான டோமாஸ் பெர்டிச்சிற்கு எதிராக 2-0 என்று வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்.

# தற்போது ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் சச்சின்!

அகமதாபாத் —

கிரிக்கெட்டில் சாதிக்க இன்னும் நிறைய இருக்கிறது. இப்போதைக்கு ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என கூறியிருக்கிறார் சச்சின் டெண்டுல்கர்.

சுமார் 16 ஆண்டுகளாக இந்திய அணிக்காக விளையாடிவரும் சச்சின் - பல்வேறு சாதனைகளுக்குச் சொந்தக்காரர். டெனிஸ் எல்போ காயம் குணமாகி ஆறு மாதங்களுக்குப் பின்பு களமிறங்கியுள்ள இவர், இலங்கைத் தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறார். ஐந்தாவது போட்டிக்காக அகமதாபாத் வந்திருந்த இவர் அளித்த பேட்டியில் கூறியதாவது -

கிரிக்கெட்டில் படைக்கவேண்டிய



சாதனைகள் நிறைய இருக்கின்றன. அதற்கு முன் ஓய்வுபெறமாட்டேன். நமது அணி தற்போது மிகச் சிறப்பான நிலையில் உள்ளது. இந்த வெற்றிநடை தொடருமென நம்புகிறேன். இதற்கு ரசிகர்களின் ஆதரவும் தேவை. சிரேஷ்ட வீரர் என்ற முறையில் இளம் வீரர்களிடம் கிரிக்கெட் விடயங்களைப் பகிர்ந்து கொள்வேன். அவர்களது குறைகளை நிவர்த்தி செய்ய உதவுவேன்.

விளையாட்டைப் பொறுத்தவரையில் எல்லோருமே மாணவர்கள் தான். இதில் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. ஆனால் நாம் தான் மாஸ்டர் என்ற நினைப்பு வந்துவிட்டால் அவ்வளவுதான். நமது கற்கும் திறன் அப்படியே நின்றுவிடும். திறமையிலும் அதற்கு மேல் வளர்ச்சி இருக்காதெனத் தெரிவித்தார்.

# நூல்களை உருவாக்கி வெளியிடுவது இலகுவானதொரு காரியமில்லை!

## ஆறு திருமுருகன் தெரிவிப்பு

உடுவில் —

மகாபாரதத்தில் சொல்லப்படுகின்ற சிகண்டி என்ற பாத்திரத்தைக் கொண்டு இங்கு பா நாடகம் ஒன்றினை உருவாக்கியுள்ளார் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள்.

இணுவில் அறிவாலயத்தில் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'பஞ்சாட்சரம்' பா நாடகங்கள் என்ற நூலின் ஆய்வுரையை நிகழ்த்திய தமிழ்த்துறை பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அறிவாலய தலைவர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வாழ்த்துரை வழங்கிய ஆறு திருமுருகன் குறிப்பிடுகையில் -

பேசுவது என்பது சுலபம். ஆனால் நூலை உருவாக்கி வெளியிடுவதென்பது இலகுவான ஒரு காரியமில்லை. இதற்கு துணிவு, பொறுமை, பிறரின் கேள்விக்கு பதிலளிக்கும் திறமை இருக்க வேண்டும். சிலர் நூலிலே என்ன பிழையைக் கண்டுபிடிக்கலாம் என காத்திருப்பர். அவர்களுக்கு விளக்கத்துடன் பதிலளிக்கும் திறமை பெற்றவர்களே நூலை வெளியிடமுடியும் என்றார்.

வணிகத்துறை பேராசிரியர் தேவராஜா பேசும்போது -

50 ஆவது நூலை வெளியிட்ட பெருமை நூலாசிரியரைச் சாரும். விடுதலை வேட்கை கொண்ட மக்கள் விடுதலை உணர்வைப் பெற உதவ பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவரின் 51 ஆவது நூல் விரைவில் வெளிவரவுள்ளது என்றார்.

கலாநிதி சபா.ஜெயராசா வெளியீட்டுரை நிகழ்த்தும் போது - ஒருவர் முழு மனிதனாகும் போதே அவரால் நூலை வெளியிடமுடியும். விரைந்து நூல்களை உருவாக்கும் செங்கை ஆழியான், சொக்கன் வரிசையில் ச.வே.பஞ்சாட்சரமும் உள்ளார். மேலை நாடுகளில் இன்ன இன்ன செயல்களைச் செய்தவர்கள் வாழ்க்கையில் தன்னிறைவு பெற்றவர்களாக கணிக்கப்படுகின்றனர். அந்த வகையில் நூலை எழுதுபவர்களும் தன்னிறைவு கண்டவர்களாக உள்ளனர் என்றார்.

நூலாசிரியர் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் ஏற்புரை வழங்கும்போது -

சிறுவயது முதல் தமிழ் மீது கொண்ட காதலே என்னை இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொள்ள வைத்தது. எமது மண்ணில் மட்டுமல்ல, தமிழ் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் எனது பணி தொடரும் என்றார். (101)

# மகிந்தவுக்கு ஆதரவான சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

வடமராட்சி —

பருத்தித்துறை மந்திகை ஈ.பி.டி.பி அலுவலகத்தின் மதில்களில் இராணுவத்தினரின் துணையுடன் ஈ.பி.டி.பியினர் ஒட்டிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான தேர்தல் சுவரொட்டிகளை தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸார் அகற்றியுள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை இராணுவத்தினரின் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி அலுவலக மதில்களில் ஒட்டப்பட்டிருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஏராளமான சுவரொட்டிகளை அன்று மாலையே தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உரித்து அகற்றினர்.

இலங்கை ஜனநாயக தேர்தல் நடைமுறையின்படி - தேர்தல் காலங்களில் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளே பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## திறந்த பல்கலைக்கழக

# முன்பள்ளி கற்கைநெறிக்கான விண்ணப்பதாரிகள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படவுள்ள முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இயக்குநர் எந்திரி ச.ஞானேந்திரா தெரிவித்துள்ளார்.

இந்த கற்கைநெறிக்கு அண்மையில் திறந்த பல்கலைக்கழகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது தெரிந்ததே. குறித்த விண்ணப்பப்படிவங்கள் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளதால் உடன் படிவங்களைப் பெற்று இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

தமிழ்மொழிமூலம் நடைபெறவுள்ள இந்தக் கற்கைநெறிக்கு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## தேர்தல் கடமைக்கான நியமன கடிதங்கள்

யாழ்ப்பாணம் —

புதிதாக பட்டதாரி நியமனம் பெற்று அரச திணைக்களங்களில் கடமையாற்றிய பின்னர் மீண்டும் வேறு பதவிக்காக நியமனம் பெற்ற அல்லது கீழுழைப்பு பட்டதாரிகளாக இருந்து அரச திணைக்களங்களில் நிரந்தர நியமனங்களைப் பெற்ற அலுவலர்கள் தேர்தல் கடமைக்கு விண்ணப்பித்திருந்தால், அதற்கான கடிதத்தை தாம் முன்னர் பணியாற்றிய திணைக்களத்துடன் தொடர்புகொண்டு பெறுமாறு யாழ்.தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

## குன்றும் குழியுமாக காணப்படும் சுன்னாகம்-புத்தூர் வீதி

சுன்னாகம் —

சுன்னாகம் - புத்தூர் வீதி திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதால் குறித்த வீதியூடாக சந்தைக்குச் செல்லும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சுன்னாகம் - புத்தூர் வீதியில் காணப்படுகின்ற குழிகளால் அதிகாலை நேரம் புத்தூர், நவக்கிரி, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் போன்ற பிரதேசங்களிலிருந்து சுன்னாகம் மற்றும் மருதனார் மடம் சந்தைகளுக்கு துவிச்சக்கரவண்டியில் செல்லும் விவசாயிகளே தினமும் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக சுன்னாகம் ரயில் நிலையத்துக்கும் சுன்னாகம் சந்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய குழிகள் காணப்படுவதால்; இந்தப் பகுதியில் அதிக விபத்துகள் இடம்பெறுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## யுனிசெவ்வின் உதவியுடன் மலசல கூடங்கள்

சுதுமலை —

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் யுனிசெவ் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் 20 பயனாளிகளுக்கு மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக பிரதேச செயலக அலுவலர் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் கிழக்கு ஜே/147 கிராம சேவையாளர் பிரிவில் 6 மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதற்கட்டமாக இதற்கான நிதிப்பங்களிப்பு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய கிராமசேவையாளர் பிரிவிலுள்ள 14 பயனாளிகளுக்கும் கிராம சேவையாளர்களின் சிபார்சுக்கு அமைய மலசல கூடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. (91)

# பொலித்தீன் கழிவுகளால் நிரம்பி வரும் முனீஸ்வரன் வீதியிலுள்ள புல்லுக்குளம்

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரின் மத்தியில் அமைந்திருந்த குளங்களில் இன்றுவரை ஓரளவு தப்பிப் பிழைத்திருக்கும் புல்லுக்குளம் தற்போது மிக வேகமாகவும் மோசமாகவும் மாசுபடுத்தப்பட்டு வருவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முனீஸ்வரன் வீதியின் இருபுறமும் அமைந்துள்ள நடைபாதை வியாபாரிகள் தமது கழிவுகளை குறிப்பாக பொலித்தீன் கழிவுகளை மிகப்பெருமளவில் இக்குளத்துக்குள் வீசி அதனை மாசுபடுத்துகின்றனர்.

குளத்தின் தென்கரைப் பகுதியில் கால்நடைக் கழிவுகள் உட்பட நகரக்கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் அடிக்கடி துர்நாற்றம் வீசுவதும் உண்டு. யாழ்.நகரின் மத்தியில் உள்ள இந்தக் குளத்தைப் பாதுகாக்க உரிய பகுதியினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து உதவுவது மிக மிக அவசரமானது எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். (31)




கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் நிகொட் உதவியுடன் கட்டப்பட்ட புதிய மாடிக் கட்டட வகுப்பறைத் தொகுதி திறப்பு விழாவின் விருந்தினர்கள் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, நிகொட் திட்டப்பணிப்பாளர் லங்காநேசன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கல்லூரி அதிபர் (நடுவில்) சிவசிதம்பரத்தால் அழைத்து வரப்படுவதைக் காணலாம். (14)



வடமராட்சி லயன்ஸ் கழகம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடத்திய மரம்நாட்டு விழாவில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி.சிவகுமாரன் மரக்கன்று நாட்டிவைக்கிறார். (12)

# திருமறைக் கலாமன்ற கொடி மாதம் ஆரம்பம்




சுதுமலை —

திருமறைக் கலாமன்றத்தின் கொடி மாதம் நவம்பர் 1 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வை மன்ற இயக்குநர் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் ஆரம்பித்துவைத்தார்.

40 ஆண்டு காலமாக கலைப்பணி செய்து பெருநிறைவு பெற்றுள்ள மன்றம், இந்தக் கொடி மாதத்தை தேசிய ரீதியில் அனைத்து மன்றங்களையும் இணைத்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, திருமறைக் கலாமன்ற தினம் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (91)



வடமராட்சி லயன்ஸ் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட லயன்ஸ் வலயத்தலைவர் லயன் எஸ்.அரியரத்தினம் வருகைதந்திருந்தார். அவரை லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் எஸ்.தணிகாசலம் மங்கள விளக்கேற்றி வரவேற்பதைக் காணலாம். (12)



சங்கானை அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோயாளிகளுக்கான சிகிச்சை அண்மையில் மேற்கொள்ளப்பட்டபோது வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரன் நோயாளி ஒருவரைப் பார்வையிடுவதையும், எதிர்ப்புறம் வைத்தியகலாநிதி எம்.எஸ்.முகுந்தன் அவதானிப்பதையும் காணலாம். (48)




# "பார்க்கின்சன் வியாதியும்" விற்றமின் 'E' சத்தும்




பார்க்கின்சன் எனப்படும் நடுக்க வியாதியைத் தடுக்க விற்றமின் 'ஈ' சத்து நிரம்பிய உணவுகளைச் சாப்பிடுவது சிறந்தது என மருத்துவர்கள் கூறியுள்ளனர். மிதமான விற் றமின் 'ஈ' சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடு கின்றவர்களுக்கு பார்க் கின்சன் நோய்க்கான வாய்ப்பு கணிசமாகக் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பார்க்கின்சன் நோயைக் குணப்படுத் துவதற்கு இதுவரையும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. மூளையில் டோபோமைன் என்ற இரசாயனப் பொருள் சுரக்கும் கலங்கள் அதிகமாக உள்ளன. இவை மூளையில் தகவல் பரிமாற்றம் சரியாக நடைபெறுவதற்குப் பெரிதும் உதவுகின்றன. இவற்றின் எண்ணிக்கை குறையும்போது, இந்த நோய் ஏற்படுகின்றது. இதனால் நரம்பு மண்டல செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டு, நரம்புத்தளர்ச்சி ஏற்படுகின்றது. இதன் விளைவாக கைகள், உதடு, கால்கள் உள்ளிட்ட சிலபாகங்கள் தானாகவே நடுங்க ஆரம்பிக்கின்றன. இதனை ஒருவகையான நரம்புத்தளர்ச்சி என அழைக்கமுடியும்.

# உடலுக்கு நீர் அவசியம்

நமது உடலின் தேவைக்கேற்ப தண்ணீரை நாம் குடிக்கவேண்டும். குறைந்தது ஒருநாளைக்கு 1.5 லீற்றர் நீர் நமக்குத் தேவை. தினமும் வியர்வை மற்றும் சிறுநீர் மூலம் எட்டு டம்ளர் நீர் நமது உடலிலிருந்து வெளியேறு கின்றது. அதற்கு ஈடாக அவ சியம் நீரைப் பருகவேண்டிய நிலை எமக்கு ஏற்படுகின்றது.



விஞ்ஞானிகளின் ஆய்வுகள் தந்த முடிவுகளின்படி - அதி காலையில் 3 டம்ளர் நீரைப் பருகும்போது, அவை தருகின்ற ஒக்சிஜன் வாயு உடலின் சம நிலைத் தன்மையைப் பேன உதவுகின்றது. எமது உடல் புவி போன்றது. நீரினுடைய தேவை எமது உடலுக்கு மிகவும் அவசியம். பல நோய்கள் நீரி னுடைய பற்றாக்குறையால் தான் ஏற்படுகின்றன. நாம் உண்ணும் உணவு நீர்முலமே சமிபாடமைகின்றது. உடலின் வெப்பத்தையும் நீரே சீரான முறையில் பேணி வருகின்றது.


# அமெரிக்க கணினியே மிக வேகமானது

தற்போதுள்ள சுப்பர் கொம்பியூட்டர்களில் தாமே மிகவேகமானது என்பதை புளூஜீன் என்ற அமெரிக்க கொம்பியூட்டர் மீண்டும் நிருபித்துள்ளது. ஒரு செக்கனில் 280.6 டரில்லியன் கணக்குகளை இது செய்யக் கூடியது. அமெரிக்காவின் லோரன்ஸ் லிவர்மேர் ஆய்வு கூடத்தில் உள்ள இந்த IBM கொம்பியூட்டர் - தற்போதைய நிலையில் உலகின் மிக சக்திவாய்ந்த கொம்பியூட்டர் ஆகும்.



உலகின் அதிவேக கொம்பியூட்டர் எது என்பது குறித்து ஒவ்வொரு ஆறுமாதமும் நிபுணர் குழுவொன்று பரிசீலனை செய்து, அதில் முதல் 500 கொம்பியூட்டர்களைப் பட்டியலிடுவர். இதன்படி கடந்த ஜுன் மாத நிலவரப்படி அமெரிக்க புளூஜீன்தான் சக்தி மிக்கதாக உள்ளது. தற்போது இதற்குப் போட்டியாக ஜப்பான் - ஒரு கொம்பியூட்டரை உருவாக்கி வருவது தெரிந்ததே.

# லண்டனில் சிங்கம்






லண்டனின் பிரபல அரச கோட்டையான லண்டன் டவர் அருகே மேற் கொள்ளப்பட்ட அகழ் வாராய்ச்சியின்போது, சிங்கங்களின் இரண்டு மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளது. இவை மத்திய காலப் பகுதிக்கானவை என ஆய்வில் தெரிய வந்துள்ளது. அந்தக்காலப் பகுதியில் லண்டனை ஆண்ட மன்னர் ஜோன் - (1199 - 1216) சிங்கங்களையும், கரடிகளையும் தனது கோட்டையில் வளர்த்து வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. எனினும், 1835 ஆம் ஆண்டில் டியூக்வெலிங்டனின் உத்தரவையடுத்து, இந்த மிருக வளர்ப்பு தடை செய்யப்பட்டது. மீட் கப்பட்ட சிங்கங்கள் வெளிநாட்டு அரசர்களுடனான நட்பின் வெளிப்பாடாக பரிசளிக் கப்பட்டவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. புராதன பிரிட்டிஷ் மன்னர்களுக்கும், சிங்கத்துக்குமான தொடர்பு தற்போது பிரிட்டிஷ் அரச இலட்சனைகளில் காணக்கூடியதாகவுள்ளது.

# தூக்கமின்மை வியாதி


ஒரு மனிதனுடைய தூங்கும் நேரத்தை மெலாடோனின் என்ற ஓமோன் தான் தீர்மானிக்கின்றது. இது மூளையிலேயே உற்பத்தியாகின்றது. சாதா ரணமாக மனிதர்களுக்கு மாலை நேரங்களில் இது அதிகமாகச் சுரக்கும். இதுவே தூக்கத்தின் அறிகுறி. இந்த ஓமோனின் சுரப்பில் ஏதாவது பாதிப்பு ஏற்படுமாயின், தூக்கமின்மை அதாவது - "இன்சோம்னியா" என்ற வியாதி ஏற்படுகின்றது.



ஆனால் இந்த ஓமோனைச் சுரக்க வைக்கக்கூடிய மாத்திரைகள் கிடைக்கின்றன. ஆனால் தூங்குவதற்கு 2 மணிநேரத்தின் முன் இத்தகைய மாத் திரைகளை எடுத் துக்கொள்ளவேண்டும். அப்படி இல்லா விட்டால் தேவை யில்லாத பக்கவிளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். எது எப்படியிருந்தாலும், இயற்கையை மீறி எதுவும் செய்வது உடலுக்கு ஆபத்தாகவே முடியும்.

# குளோனிங்மூலம் பன்றிக்குட்டிகள்

குளோனிங் முறையில் முதன் முறையாக குதிரையை உருவாக்கிய இத்தா லிய ஆய்வு நிறுவ னம் தற்போது அந்த முறை மூலம் 14 பன்றிக் குட்டிகள் பிறந்துள்ளதாக அறிவித்துள்ளது. பன்றிகளில் மேற் கொள்ளும் ஆய்வு மூலம் அவற்றின் உறுப்புகளை மனி தனுக்கு தேவை யான போது உறு ப்பு மாற்றுச் சிகிச் சைக்குப் பயன் படுத்தலாம் என்பது உறுதி செய்யப்பட் டுள்ளது.




ஏற்கனவே குளோனிங் மூலம் - ஆடு, எலி, மாடு, முயல், பூனை, கழுதை, நாய், பன்றி என்பன இன விருத்தியாக்கம் செய்யப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டு முதல் முறையாக குதிரையும் இந்த நிறுவனத்தால் உருவாக் கப்பட்டது. குளோனிங் முறையில் உருவான விலங்குகளில் அடிப்படைக் கலமான (Stemcell) எனப்படும் கலம் பல்வேறு முதிர்காலங்களாக மாறு வது எவ்வாறு என்பது குறித்துத் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெறுகின்றது.

# புற்றுநோயைத் தடுக்கும் உடற்பயிற்சி




உடற்பயிற்சி செய்வது இருதயத்துக்கு எவ்வளவு ஆரோக்கியமானதோ அதேயளவுக்கு புரோஸ்டேட் சுரப்பிக்கும் ஆரோக்கியமானதுதான். உடற்பயிற்சியை வழக்கமாகச் செய்கின்ற வயது முதிர்ந்த ஆண்கள் - புரோஸ்டேட் சுரப்பிப் புற்றுநோயினால் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். 65 வயதைத் தாண்டிய முதியவர்கள் வாரத்துக்கு 3 மணிநேரம் நீச்சல் போன்ற கடுமையான பயிற்சிகளைச் செய்துவரும் பட்சத்தில், உயிருக்கு ஆபத்தான புரோஸ்டேட் புற்றுநோயைத் தவிர்க்கமுடியும் எனக் கூறப்படுகிறது. உடற்பயிற்சி செய்யும் புற்றுநோயாளர்களுக்கிடையே செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, 70 வீதமான நோயாளிகள் உடற்பயிற்சி செய்யும் காரணத்தினால் புற்றுநோயிலிருந்து ஓரளவு தப்பியிருக்கின்றார்கள். ஆனால், உடற்பயிற்சி செய்யும் வயது முதிர்ந்த ஆண்கள் வேறு நோய்களுக்கு உட்படுவதாகவும் வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.




# வறண்ட கண்கள்

சில பெண்களுடைய கண்கள் வறண்டு காணப்படுகின்றன. இதற்கு டிரை ஐ கின்ரோம் என்று பெயர். கண்ணீர் சுரப்பிகள் போதியளவுக்கு வேலை செய்யாமல் இருந்தாலோ, ஈரப்பதம் இல்லாவிட்டாலோ இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குரிய தீர்வாக கண்ணீரை வரவழைக்கக்கூடிய செயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தலாம். ஆனால், இது ஒரு தற்காலிக தீர்வாகவே அமையும். இந்த நோய்க்குரிய தீர்வாக ஒமேகா - 3 அமிலச்சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடும் பெண்களுக்கு இத்தகைய குறைபாடு நீங்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இத்தகைய அமிலச்சத்து மீன்களில்தான் மிகவும் அதிகமாக உள்ளது எனவும், அத்துடன் இத்தகைய நோயுள்ளவர்கள் சோயா உணவுகளைச் சாப்பிட்டாலும் இந்த நோய்கள் குணமடையும் என வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

# மாணவரின் செய்மதி விண்ணில்





மாணவர்களாலேயே உருவாக்கப்பட்ட செய்மதி ஒன்று விண்ணில் ஏவப்பட்டுள்ளது. ஐரோப்பிய மாணவர்களால் முதன்முறையாக தனியாக உருவாக்கப்பட்ட இந்த (Sseti என்ற செய்மதி வடரஷ்யாவிலிருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.

52 கிலோ நிறையுடைய இந்தச் செய்மதி - 9 நாடுகளைச் சேர்ந்த 100 பல்கலைக்கழகக்களைச் சார்ந்த 100 மாணவர்களால் கூட்டாகத் தயாரிக்கப்பட்டது.

மாணவர்களின் இந்தச் செயற்திட்டத்துக்கான நிதியுதவியை ஐரோப்பிய விண்வெளி ஆய்வுக்கழகம் வழங்கியது. மாணவர்களின் இந்தச் செய்மதி பூமியைப் பல்வேறு கோணங்களில் படம் பிடிப்பதுடன், தொடர்பாடல் துறைக்கும் உதவியளிக்கவுள்ளது. இது விண்வெளி ஆய்வு மட்டுமல்ல, மாணவர்களை விண்வெளி ஆய்வுத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்வதற்கான ஊக்குவிப்பும் என்கிறார் ஆய்வுக்கழக கல்விப் பிரிவுப் பணிப்பாளர்.

# பறவைக்காக உறங்கும் நியூயோர்க் நகரம்


உறங்காத நகர் எனப்படும் நியூயோர்க்கின் உயர்ந்த கட்டடங்களில் உள்ள மின் விளக்குகளைப் புலம்பெயரும் பறவைகளுக்காக இரவு வேளைகளில் நிறுத்திவைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.



ஒவ்வொரு இலையுதிர் காலப் பகுதி இரவு வேளைகளில், நூற்றுக் கணக் கான புலம் பெய ரும் பறவைகள் நியூயோர்க் மன் ஹட்டனில் உள்ள உயர்ந்த அடுக்கு மாடிக்கட்டடங் களுடன் (Sky scra pers) மோதி உயிரிழக்கின்றன.

இரவில் இந்தக் கட்டடங்களில் பிரகாசமாக எரியும் மின் விளக்குகளால் இந்தப் பறவைகள் தாம் புலம் பெயரும் பாதையைத் தவறவிட்டு, இந்தக் கட்டடங்களுடன் மோதி இறக்கின்றன. சூரிய மறைவுக்கு பின்னர் தெற்கு நோக்கிப் புலம்பெயரும் இத்தகைய பறவைகளின் உயிரைக் காக்கவே இந்தக் கட்டடங்களில் உள்ள மின் விளக்குகளை அணைக் கவும், அதே சமயம் மின் சக்தியை சேமிக்கவும் இந்தக் கட்டட உரிமையாளர்கள் முதற்தடவையாக தீர்மானம் எடுத்துள்ளனர்.

# முட்டையை வேகவைத்து உண்ண ஆலோசனை




பறவைக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்கச் சமையலுக்கு எடுக்கும் முட்டைகளையும் நன்கு வேகவைக்குமாறு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பச்சை முட்டையில் (Raweggs) தெள்ளுகள், வைரஸ்கள் இருப்பதால் அவை மூலம் Salmonella பறவைக் காய்ச்சல் தொற்று ஏற்படலாம்.

முட்டை மூலம் பரவுவது குறைவானதாக இருப்பினும், முன்னெச்சரிக்கையாக எதையும் வேகவைத்து உண்பது நல்லதே என உணவுப்பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

பறவைக்காய்ச்சல் வைரஸ் - உயிர்ப்பறவைகள் மூலமே பரவும், முட்டைகள் மூலம் அல்ல என பிரிட்டிஷ் நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் பெனின்டன் கூறியுள்ளார்.

இறைச்சி வகைகளைக் குறைந்தது 70°C வெப்ப நிலையில் வேகவைத்து உண்பதே நல்லது என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்துகிறது.

# ஆஸ்துமா நோயாளிகள்



ஆஸ்துமா நோயுள்ளவர்கள் - உடலை வருத்தக்கூடாது என்ற ஒரு மூடநம்பிக்கையை மக்கள் வளர்த்து வருகிறார்கள். ஆனால் ஐரோப்பிய நாடுகளில் முட்டு நோயுள்ளவர்கள் உடலை வருத்தி வேலைசெய்கிறார்கள். உண்மையில் அவர்களுடைய நோயினுடைய தாக்கம் இதன் காரணமாகக் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. நன்கு வேலை செய்யும்போது நுரையீரல் நன்கு வேலை செய்கின்றது. இதன் காரணமாக "கார்டியோ பல்மனறி பிட்னஸ்" மிகவும் சிறப்பாக அமைகின்றது. ஆனால் பம்பிகளைப் பாவிக்கும் ஆஸ்துமா நோயாளிகள் கடினமாக வேலைசெய்யும் நேரங்களில் பம்பிகளைப் பாவிக்கத் தேவையில்லை என வைத்தியர்களினால் ஆலோசனை கூறப்படுகிறது.

ஆனாலும் பம்பிகளும், கையுமாக அலையும் ஆஸ்துமா நோயாளிகளை ஒன்றும் செய்ய முடியாதுள்ளது.

# தமிழர்களின் பாரம்பரிய மருத்துவமாக சித்த மருத்துவத்துறை விளங்குகிறது!

## -கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம்-

கிளிநொச்சி—

கிளிநொச்சி - கல்மடு நகர்ப் பிரதேசத்தில் பாரிய மூலிகைப் பண்ணைத் திட்டம் உட்பட சித்தமருத்துவ அபிவிருத்தித் திட்டங்கள் பல முன்னெடுக்கப் படுவதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி - கல்மடு நகரில் கடந்த வியாழக்கிழமை பாரிய மூலிகைப் பண்ணைத்திட்டத்தை, மற்றும் சித்தமருத்துவ அபிவி ருத்தித் திட்டங்களை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

தமிழர்களின் பாரம்பரிய மருத்துவம் சித்தமருத்துவமாகும். இந்த மருத்துவ வளர்ச்சிக்குத் தேவையான சகல வளங்களும் கிளிநொச்சியில்தான் உள்ளன. எதிர்காலத்தில் இங்கு சித்தமருத்துவ பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் என்னால் 100 ஏக்கர் காணி ஒதுக்கிக் கொடுக்கப் பட்டுள்ளது.

இன்று முன்னோடி நடவடிக்கையாக பாரிய மூலிகைப் பண்ணை ஆரம்பிக்கப்படுகிறது.

இந்தத் திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற உள்ளூர் - வெளியூர் சித்தமருத்துவ அதிகாரிகள் ஆக்கபூர்வமாக உதவ முன்வந்துள்ளமை மகிழ்ச்சி தருகின்றது. இந்தப் பிரதேச மக்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

கல்மடு நகர் மூலிகைப் பண்ணை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, அதற்கான மூலிகை இடம் 32 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப் படவுள்ளது.

சித்த மருத்துவ அபிவிருத்திப் பணிகளில் ஆர்வத்துடன் இணைய முன்வரும்போது மக்களுக்கு மூலிகைப் பண்ணை வளாக சுற்றாடல் காணி வழங்கப்பட்டு வீடமைப்புத் திட்டங்களும் உருவாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலகர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - டொக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி, டொக்டர் ஜெயராஜா, கல்மடு



நகர் கிராம அலுவலர் பரமதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் - யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறைத் தலைவர் டொக்டர் திருமதி பத்'மராசா உட்பட பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், துறை சார்ந்தவர்கள், தமிழீழ சுகாதார சேவை பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டிகள்

கிளிநொச்சி—

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறையின் நடாத்தும், மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டிகள் நாளை மறுதினம் பழுகாமம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, பதிவு செய்ய வேண்டிய கழகங்கள் நாளைக்கிடையில் பதிவு செய்ய வேண்டும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், (மகளிர்க்கானது) கிளித்தட்டு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வன்னிப் பிரதேச மக்கள் வாக்களிக்க விசேட வசதி

### மூன்று மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கிளிநொச்சி—

ஜனாதிபதி தேர்தலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவென 3 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பார ஊர்திகள் சங்கம் மற்றும் போக்குவரத்துக் கழகம் ஊடாக மக்கள் கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

போக்குவரத்துக்கென 70 ஆயிரம் லீற்றர் டீசல், 20 ஆயிரம் லீற்றர் பெற்றோல் தேவைப்படுவதாக கிளிநொச்சி அரச அதிபர் தேர்தல் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்தே 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 90 ஆயிரம் லீற்றர் எரிபொருளை கிளிநொச்சிக்கு எடுத்து வருவதற்கான அனுமதியை படையணி தலைமை அலுவலகம் வழங்கியுள்ளதாகவும், விரைவில் எரிபொருள் வந்து சேரும் என அவர் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக் கென எழுதுவினைஞர்கள் 640 பேரும், கனிஷ்ட தலைமை அதிகாரி 300 பேரும் தெரிவு செய்யப் பட்டுள்ளதுடன் அவர்களுக்குரிய பயிற்சி வகுப்புகள் யாவும் முடிவடைந்து விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நெருப்புக்காய்ச்சல்

மன்னார்—

மன்னார் மடு பிரதேசத்தில் நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றதையடுத்து நெருப்பு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை மக்களிடையே நடாத்தவுள்ளதாக திலீபன் நடமாடும் மருத்துவசேவையினர் தெரிவித்துள்ளனர்.

நெருப்புக் காய்ச்சலுக்கு உள்ளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் மடு பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தநோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பிரதேசத்தில் உள்ள கீரி சுட்டான், முள்ளிக்குளம், வலயன்கட்டு, பரிசன்குளம், விளாத்திக்குளம் ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளதாகவும் இந்த மருத்துவ மனையினர் தெரிவித்துள்ளனர்.

## இறுவட்டு வெளியீடு

மன்னார்—

மன்னார் முத்து சிலாவத்துறை இளைஞர் கழகத்தால் தற்போதைய நிலை என்ற பெயரில் கற்பிட்டியில் நேற்றுமுன்தினம் இறுவட்டு ஒன்று வெளியிடப்பட்டது. இதனை முத்து சிலாவத் துறை இளைஞர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வானது வன்னி மாவட்ட முன்னாள் நூர்தீன் மர்சூரின் தலைமையில் நடைபெற்றது. இந்த இறுவட்டினை - தாம் வெளியேற்றப்பட்டு 15 வருடங்கள் கழிந்த நிலையில் தமது பிரதேசம் அபிவிருத்தி செய்யப் படவேண்டும் என்பதற்காகவே இது வெளியிடப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில் தொடர் மழையால் நலன்புரிநிலைய மக்கள் பெரும் அவலம்

அம்பாறை—

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களிலும், தற்காலிக கொட்டில்களிலும், தங்கியிருக்கின்ற மக்கள் அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிவருகின்றனர். தற்போது பெய்துவருகின்றதொடர் மழையால் தாழ்நிலப் பிரதேசங்களான தம்பிலுவில், கண்ணகிபுரம், தாண்டியடி, உமரி, கோமாரி ஆகிய இடங்களில் தங்கியுள்ள மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 10 மாதங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் தாம் நலன்புரி முகாம்களிலும், தற்காலிக கொட்டில்களிலும் அவல வாழ்க்கை வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளதாகவும், தற்போது பெய்துவரும் கடும் மழையால் வெள்ளம் முகாம்களுக்குள் புகுந்துள்ளதால் தமது அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாம் சமைக்கவோ, நிம்மதியாகத் தூங்கவோ முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இத்தகைய அவல வாழ்க் கையிலிருந்து தமக்கு எப்போது விமோசனம் கிடைக்கும் எனப் பெருமூச்சு விட்டவண்ணம் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

## புனர்வாழ்வுக் கழகத்தால் படகுகள் வழங்கப்பட்டன

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் - சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 21 கடற்றொழிலாளர்களுக்கு கடந்த சனிக்கிழமை படகுத் தொகுதிகள் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் வைத்து வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் வழங்கப்படவிருந்த 100 படகுத் தொகுதிகளில் ஏற்கனவே 79 படகுத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இறுதியாகவுள்ள 21 படகுத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் உபதலைவர் இ.தணிகாசலம் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் -

கருத்துரைகளைத் கடற்புலிகள் முல்லைத்தீவு நகரத் தளபதி க.தினேஸ் நிகழ்த்தினார். வெளியிணைப்பு இயந்திரங்கள், படகுகள், வலைத்தொகுதி ஆகியவற்றை க.தினேஸ், இ.தணிகாசலம் ஆகியோர் கையளித்தனர்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் 08

1837 : முதலாவது மகளிர் கல்லூரி "மவுண்ட் ஹோலியோக் ஃபிமேல் செமினறி" என்ற பெயரில் மாஸா சூஸட்டில் ஆரம்பிக்கப்பட்டது.

1867: "மேவரு ஏறி" டேவிற் லிவிங்ஸ்ட்டன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1895: வில் ஹெல்ம் நோண்ட் ஜென் என்பவர் ஊர்ஸ பக் பல்கலைக்கழகத்தில் ஒரு பரிசோதனை முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது "எக்ஸ் கதிர்" கண்டுபிடிக்கப்பட்டது.

1907: முதன் முறையாக பாரிஸிலிருந்து எட்வர்ட் மன்னனுடைய புகைப் படம் கம்பித் தொடர்பாடல் மூலம் லண்டனிலுள்ள "டெயிலி மிரர்" செய்தித்தாளுக்கு அனுப்பப்பட்டது. இந்தப் படம் லண்டனை வந்தடைய 12 நிமிடங்கள் எடுத்தது.

1907 : "தொழிலாளர்களுக்கு நியாயமான, போதுமான அளவு ஊதியம் கொடுக்கப்படவேண்டும். நியாயமான, போதுமான ஊதியம் என்பது ஒரு சாதாரண தொழிலாளி இன்றைய நாகரிக சமுதாயத்தில் ஒரு மனிதனைப்போல வாழத் தேவையான ஊதியம்" என்ற புகழ்பெற்ற தீர்ப்பினை அவுஸ்ரேலியாவில் நடுவர் நீதிமன்ற நீதிபதி ஹென்றி பி ஹிக்கின்ஸ் வழங்கினார்.

1917 : ரஷ்யாவில் லெனின் தலைமையில் முதலாவது கம்யூனிஸ்ட் அரசு அமைந்தது. அது "கவுன்சில் ஒப் பியூப்பிள்ஸ் கமிஸ்ஸார்" என அழைக்கப்பட்டது. முதல் பெண் அமைச்சராக சமூக நலத் துறைக்கு அலெக்ஸாண்டரா கொல்லாண்டாய் நியமிக்கப்பட்டார்.

1919 : பிரிட்டனில் மகளிர் அரச விமானப்படைப் பிரிவு கலைக்கப்பட்டது.

1923 : ஹிட்லர் ஜெனரல் எரிக் லூடென் டோர்ஃப் உதவியுடன் மூனிச்சில் புரட்சி செய்து ஆட்சியைப் பிடிக்க முயன்றார். முயற்சி தோல்வியடைய ஹிட்லர் கைது செய்யப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார்.

1933 : ஆப்கானிஸ்தான் மன்னர் நாதிர்கான் படுகொலை செய்யப்பட்டார்.

1950 : வட கொரியாவில் அமெரிக்க ஜெட் விமானத்துக்கும் - ரஷ்யாவின் மிக் - 15 ஜெட் விமானத்துக்கும் வானில் போர் நடந்தது. ஜெட் விமானங்களுக்கிடையே வானில் நிகழ்ந்த போர்களில் முதலாவது போர் இதுவாகும்.

1956 : அமெரிக்காவின் பிளாக்ஹில் என்ற இடத்தில் இருந்து "வளிக் கோள ஆய்வுகூட பலூன்" ஒன்று பறக்கவிடப்பட்டது. இதில் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் கொமாண்டர் மால்காம் டிராஸ் என்பவரும் லெப்டினன்ட் கொமாண்டர் எம்.லீ என்பவரும் சென்றனர். இந்த ஆய்வுகூட பலூன் 76 ஆயிரம் அடி உயரம்வரை செனறு சாதனைபடைத்தது.

1958 : அமெரிக்கா பயோனீர் - 2 விண்கலத்தை ஏவியது. இதனது இயந்திரங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்தப் பயணம் வெற்றியடையவில்லை.

☆ : வித்துவ சீரோன்மணி சி.கணேசையர் காலமானார்.

1967 : பிரிட்டனில் முதலாவது உள்ளூர் வானொலி நிலையம் ரேடியோ லெய்செஸ்டர் என்ற பெயரில் ஒலிபரப்பை ஆரம்பித்தது.

1968 : அமெரிக்கா சூரியக் காற்றுப் பற்றி ஆய்வு நடாத்த பயோனீர் - 9 என்ற விண்கலத்தை ஏவியது.

1969 : பிரான்ஸின் மேற்கு பைரென்னியிலுள்ள கொப்ரிடிலா பியாரி செயின்ட் மார்ட்டின் குகை மிக ஆழமானதாகக் கருதப்படுகிறது. இந்தக் குகையில் ஒரு குழுவினர் இறங்க ஆரம்பித்தனர். இந்த மாதம் 11 ஆம் திகதிவரை அவர்கள் குகையினுள் இறங்கிக் கொண்டே சென்றனர். அவர்கள் நுழைவாயிலில் இருந்து 1173 மீற்றர்கள் ஆழம்வரை சென்று திரும்பினர்.

1984 : அமெரிக்கா நான்கு விண்வெளி வீரர்களுடன் டிஸ்கவரி 51A என்ற விண்ணோடத்தைச் செலுத்தியது.

1988 : சல்மான் ருஷ்ட்டி எழுதிய "சாத்தானின் கவிதைகள்" நூலுக்கு இந்த ஆண்டுக்குரிய சிறந்த கற்பனைக் கதைக்கான "விட் பிராட்" விருது வழங்கப்பட்டது.

1991 : ரோமில் கூடிய ஐரோப்பிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள், யூகோஸ்லேவியாவில் நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்தும் நோக்குடன் அந்த நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத்தடை விதித்தனர்.

1993 : ஜோர்தானில் முதன்முதலாக பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல் நடைபெற்றது.

தொகுப்பு : — சந்துரு

## தன்னலம் பாராது செயற்படும் ஆசிரியர்களின் பணி அளப்பரியது

மட்டக்களப்பு—

தன்னலம் பாராது மாணவர்களுக்கு கல்வி, ஒழுக்கம், பண்பாடு, தேசியம் போன்றவற்றைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களது அர்ப்பணிப்புக்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாராட்டப்படவேண்டுமெனத் தமிழீழ கல்விக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட துணைப் பொறுப்பாளர் தாயகன் தெரிவித்தார்.

வெல்லாவெளிக்கோட்ட அதிபர்களுடனான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றவேளை அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாணவர்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியிலும், படையினரின் கெடுபிடிகள், வறுமை, இடப்பெயர்வு, போக்குவரத்து போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு பல கோணங்களிலும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. வாடுகின்றார்கள். இவர்களை ஒரே சமூகமாக அமைத்து, ஆசிரி யர்கள் கல்வியை கற்பிக்கின்றார்கள். இவர்களுடைய சேவைகள் அளப்பரியது என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

மறுபடியும் மறுபடியும் திருப்பிச் சொல்லப்படும் வார்த்தைகளுக்கு இன்னுமொரு ஒலியும் உண்டு; இன்னுமொரு அர்த்தமும் உண்டு!

- மாண்டெயின் -

## நமது நோக்கு

# ரணிலின் 'மறை' முகம்

கடைசியாக ரணில் விக்கிரமசிங்க யார்? அவர் எப்படிப் பட்டவர்? அவர் தமிழ் மக்களுக்கு சமாதானத்தின் பெயரால் அவரது ஆட்சிக் காலத்தில் எதைச் செய்தார், அவரின் செயற்பாடுகளால் தமிழர் பெற்றுள்ள பலன் தான் என்ன என்பதைச் சொல்ல வேண்டிய சமயத்தில் சொல்ல வேண்டியவர்களே சொல்லி, தமிழ் மக்களிடையே நிலவிய சந்தேகத்தையும், குழப்பத்தையும் தீர்த்துவைத்துள்ளமைக்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

தமிழ் மக்களின் நன்றிக்குரியவர் நவீன் திஸநாயக்கா.

யாழ். நூலக எரிப்பின்போது சம்பந்தப்பட்டவர் என்று பரவலாக சகல தரப்பினராலும் வெளிப்படையாகவே குற்றம் சாட்டப்பட்டவரான அந்தப் பிரசித்திபெற்ற காமினி திஸநாயக்கவின் மகன்..., ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் கரு ஜெயசூரியவின் மருமகன்..., அதே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பல தகைமைகளைக் கொண்டவரான நவீன் திஸநாயக்கா தான் ரணில் விக்கிரமசிங்கவின் சுயத்தை வெளிப்படுத்தி, அவர் குறித்த கருத்தியல் மதிப்பீட்டுக் குழப்பத்தைத் தெளிவு பெற வைத்துள்ளார்.

அவர் அப்படி என்ன செய்துவிட்டார் நாம் நன்றி செலுத்த? எனப் பலரும் கேட்கலாம்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா குழு பிரிந்து செல்ல ரணில் தான் காரணம். அதன் மூலம் அவர் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளார் எனப் பெருமிதத்தோடு, சிங்கள, பௌத்த பேரினவாதிகளுக்கும், மக்களுக்கும் தமது கட்சித் தலைவரின் ஆற்றலை வெளிப்படுத்தி அவரது சாதனையைப் பகிரங்கப்படுத்தும் வகையில் ஒரு உண்மையைச் சொல்லியுள்ளார்.

அது மட்டுமல்ல, மீண்டும் யுத்தம் தொடங்குமேயானால், இலங்கை இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்யப்போவதில்லை, மாறாக இந்தியப் படையினரும், அமெரிக்கப்படையினரும் தான் போர் புரிந்து புலிகளை அழிப்பார்கள். அதற்காக இந்தியாவின் சோனியா காந்தியுடனும், அமெரிக்காவின் ஜோர்ஜ் புஷ்ஷுடனும் பேச்சுவார்த்தை நடத்தி ஏற்பாடுகளைச் செய்து வைத்துள்ளார் என்றும் அவர் ரணிலின் திறன் பாடியுள்ளார்.

ஆக, ரணில் சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் எத்தகைய ஒரு ராஜதந்திர வியூகத்தை தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படுத்தியுள்ளார் என்பதை நவீன் திஸநாயக்கா அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்.

இது தென்பகுதி சிங்கள - பௌத்த -மக்களையும், தமிழ் விரோத சக்திகளையும் பிரமிப்பிலும், வியப்பிலும் ஆழ்த்தி, புருவங்களை உயர்த்தவும் வைத்திருக்கலாம்.

ஆனால், தமிழ் மக்களுக்கோ இது ஒன்றும் புதினமான அதிர்ச்சியூட்டும் விடயமல்ல. அனைத்து சிங்களத் தலைவர்களும் எத்தகைய அரசியல் சதித் திட்டங்களுடன் தமிழர் தரப்பு பிரச்சினைகளை அணுகி வந்துள்ளனர் என்பதை அவர்கள் மிகத் தெளிவாகவே உணர்ந்துள்ளனர்.

ஆனாலும்கூட ரணில், ராஜபக்ஷவைவிடப் பரவாயில்லை என்ற ஒரு பார்வை குறிப்பிட்ட சில தமிழ் மக்களிடம் இருப்பதும் உண்மையே. அதற்கு அவர்களிடம் இருக்கும் அரசியல் தெளிவின்மையும், அப்பாவித்தனமாகத் தன்னைத் தோற்றம் காட்டும் ரணிலின் மீதான அர்த்தமற்ற நம்பிக்கையுமே காரணமாகும். இத்தனைக்கும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் சிங்களத் தலைமைகள் அரசியல் தீர்வொன்றைத் தருவார்கள் என்பதில் அவர்களுக்கும் நம்பிக்கையில்லை என்பதும் உண்மையே!

இப்போது இந்தச் செய்தியானது ரணிலும் சரி, ராஜபக்ஷவும் சரி, ஏனைய பேரினவாதத் தலைவர்களும் சரி ஒரே குட் டையில் ஊறிய மட்டைகளே என்பதை எல்லோருக்குமே தெளிவுபடுத்தியிருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற சொல்லைப்பயன்படுத்தி கடந்த காலங்களில் சிங்கள அரசுகளும், ஒரு கட்டத்தில் அயலக அரசும் எத்தனை குழுக்களை உருவாக்கி, தமிழ் மக்களுக்கு அவலத்தைத் தந்தன என்பது தமிழ்மக்கள் அறியாததல்ல. தமிழ் மக்களிடையே முரண் நிலை மோதல்களையும், பிரிவுகளையும் ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் உத்தியையே சகல சிங்கள அரசியல்வாதிகளும் காலம் காலமாக கடைப்பிடித்துவருகிறார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் நிறையவே உண்டு.

அந்த ஆதாரங்களுடன் ரணிலின் இந்தத் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். அவ்வளவுதான்!

ரணிலின் இந்தச் செயற்பாடுகள் குறித்து வேறுதரப்பினர் எவரும் கூறிஇருந்தால் அது எடுபட்டிருக்காது. அவரும் அதை மறுத்து அறிக்கை விடுத்திருப்பார்.

சொன்னவர் அவரது கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவரின் மருமகன் நவீன் திஸநாயக்கா.

எனவே, அது உண்மையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த உண்மையைப் பகிரங்கமாக உறுதி செய்தமைக்காக அவருக்கு நன்றி சொல்லலாம் தானே!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தேர்தல் மேடைகளில் பேசுபவர்களால் வேட்பாளருக்கு கெடுதிகளும் வரும்!

மேடைப் பேச்சு என்பது ஒரு தனிக்கலை. எல்லோருக்கும் இது கிட்டிவிடாது. சிலருக்கு இது சுலபமாகக் கைவந்துவிடும். இதைச் சிலர் பயிற்சி செய்து பெற்றுவிடுவர். இது தேர்தல் காலம். தேர்தல் பிரசாரங்கள் நாடெங்கும் நடைபெறும் காலம். அரசியல் மேடைகளில் பேசத் தொடங்குபவர்கள் விரைவில் பேச்சாளர்களாகிவிடுவார்கள். எதிர்க்கட்சிக்காரர்களை வசைமாரி பொழிந்தே பேச்சாளர்களானவர்கள் பலர். இந்தப் பேச்சுக்களுக்கு அதிகம் விடயம் தெரிந்திருக்கவேண்டிய அவசியமில்லை. தேர்தல் பிரசார மேடைகளில் பேசுபவர்களால் வேட்பாளர் சிலருக்குச் சங்கடங்கள் ஏற்படுவதுமுண்டு. ஒரு சிறந்த கல்விமான், இவர் ஒரு சிறந்த வழக்கறிஞரும்கூட! நீதிமன்றத்தில் வழக்குப் பேசும் போதுகூட கிண்டலும் கேலியுமாகப் பேசி நீதிபதியையே கூட இவர் சிரிப்பிலாழ்த்திவிடுவார். யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸுக்கும் போட்டி அதிகமாக இருந்த காலத்தில் நடந்த ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் மேடையில் இவர் பேசினார். அப்பொழுது தமிழரசார் அறப்போர் தொடுப்போம் என்று கோஷம் முழங்கிய காலம். இந்த வழக்கறிஞர் காங்கிரஸ் மேடையில் பேசியபோது தீவுப் பகுதியிலிருந்து வந்த பெண்கள் விளங்கிக் கொள்ளாமல் "அறப்போர் தொடுப்போம்" என்பதை "அறுப்போம் துறப்போம்" என்று தவறாகக் கோஷமிட்டதாக நகைச் சுவைக்காகப் பேசிவிட்டார். அத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸுக்குத் தீவுப் பகுதி மக்களின் வாக்குகள் கிடைக்காமல் போய்விட்டது.

இப்படித்தான் இப்பொழுது நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா மஹிந்தவுக்கு ஆதரவாகப் பேசும்போதும் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை எடுத்துக் கூறி மஹிந்த அதை மீறிச் செல்கிறார் என்பதை மறைமுகமாகச் சுட் டிக்காட்டுகிறார். மஹிந்த ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்திருப்பதைச் சொல்லிக் காட்டாமல் ஜே.வி.பியினர் கொலைகாரர்கள் என்று மறைமுகமாகச் சொல்கிறார். ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பாராட்டுகிறார். அதேபோல் ரணிலுக்கு ஆதரவு தேடி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் மேடையில் தலைவர் ரணிலைப் பாராட்டுவதாக நினைத்து முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கவின் மகன் நவீன் திஸநாயக்க பேசுகையில், விடுதலைப் புலிகளிடமிருந்து கருணா வெளியேறி புதிய குழுவாக உருவெடுக்க ரணில் தான் காரணமென்று தெரிவித்திருக்கிறார். இது மட்டுமல்ல, போர் மூண்டால் இந்தியாவும் அமெரிக்காவும் படைகள் அனுப்பவும் ரணில் பேச்சு நடத்தியிருக்கிறாரென்றும் தெரிவித்திருக்கிறார். இவரது பேச்சு ரணிலுக்குத் தமிழ் மக்களின் ஆதரவை இல்லாமல் செய்யவே உதவியதாக இருக்கும். மேடைப் பேச்சாளர்களால் இப்படிக் கெடுதிகளும் ஏற்படும் என்று நண்பர் பரமசிவம் இன்றைய தேர்தல் பிரசாரம் பற்றி என்முன் அமர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

நீர் சொன்னதெல்லாம் சரிதான். இதேபோல் தாம் ஆதரிக்கும் வேட்பாளருக்காக அவரிடம் நல்ல பெயரைப் பெறுவதற்காகவோ சலுகைகளும் உதவிகளும் பெற்றுக் கொள்வதற்காகவோ சிலர் தில்லுமுல்லு வேலைகளையும் செய்வார்கள். கள்ள வோட்டுப் போடுவதற்கு ஆட்களுக்குப் பணம், பதவி, பட்டம் கொடுப்பதாக வாக்களித்துத் தயார் செய்வார் கள். வேறு யாருடைய பெயரிலும் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து வெளியிடுவார்கள். யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பெயரில் நேற்று முன்தினம் துண்டுப் பிரசுரம் ஒன்று சில இடங்களில் வெளிவந்திருந்ததும் இப்படியொரு மோசடி நடவடிக்கைதான். தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்றுகூட இப்படியான போலியான துண்டுப்பிரசுரங்கள் மோசடியாக விநியோகிக்கப்படக்கூடும். இதேசமயம் வெவ்வேறு வதந்திகளையும் பரப்பிவிடவும் முனைவார்கள். மக்கள் விழிப்புடன் நடந்துகொள்வது அவசியம் என்று நான் சொன்னேன்.

சாதாரணமாகவே பொய்யையும் புரட்டையுமே பேசி அரசியல் நடத்துவோருக்குத் தேர்தல் காலம் வந்தால் பாயாசத்துடன் விருந்து கிடைத்த மாதிரி தங்கள் பிரசாரத்துக்குச் சோடனை செய்து உலாவரவிடுவார்கள். திருப்பித் திருப்பிப் பொய்யையே சொல்லி அவற்றை உண்மையாக்கப் பார்ப்பார்கள். இப்படியான செயல்களால்தான் வன்செயல்களும் ஏற்படக் காரணமாகின்றன. இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களுக்குமிடையே காணப்படும் கடும் போட்டி காரணமாக வாக்களிப்புத் தினத்தன்று மோசமான வன்முறைகள் நிகழக்கூடுமென்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் அச்சம் வெளியிட்டிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

வடக்கு-கிழக்கிலுள்ள மக்கள் அவர்களது விருப்பப்படி வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென்று சங்கூதி போன்றவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்படி மக்களை நாங்கள் கேட்கவில்லை, வாக்களிக்க வேண்டாமென்றும் நாம் மக்களுக்குச் சொல்லவில்லை. மக்கள் தங்கள் விருப்பப்படி இந்தத் தேர்தலில் நடந்து கொள்ளலாமென்று விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இது போதாதா? என்று நான் சொன்னேன்.

இது பற்றி இன்னமும் சங்கூதியார் தரப்பிலிருந்து குரல் எதுவும் வரக்காணோம். எங்கேயோ பதில் தேடிக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை என்று சொன்னபடி பரமசிவம் நடந்தார்.

## நமது இளைஞர்களுக்கும் பொருந்தும்

### வாசகர் நோக்கு

"படகைத் தாங்கிச் செல்லும் தண்ணீரால் அதே படகைக் கவிழ்க்கவும் முடியும்" என்பது சீனப் பழமொழி. சீனர்கள் பணத்தைத் தண்ணீரோடு ஒப்பிடுவதுண்டு. வாழ்க்கைப் படகைச் செலுத்த உதவும் பணத்தை நாம் தண்ணீரைப் போல் கரைத்தால் அது நம்மை மூழ்கடித்து விடக்கூடும். பணத்தின் அருமையை இளவயதிலேயே உணர்வது அவசியம். இன்றைய இளைஞர்கள் பலர் விலையுயர்ந்த ஆடைகளை உடுத்துகிறார்கள், கைத் தொலைபேசியை மாற்றிக் கொண்டேயிருக்கிறார்கள், விலையுயர்ந்த உணவகங்களில் சாப்பிடச் செல்கிறார்கள்.


படிக்கும் வயதிலேயே காதலியை அல்லது காதலனைத் தேடிக் கொண்டு அவர்களுடன் பொழுதைக் கழிக்கப் பணம் செலவிடுகிறார்கள். அவர்களுக்கு அன்பளிப்புகளும் வாங்கிக் குவிக்கிறார்கள். தங்களது தேவைகளைக் கட்டுப்படுத்த எந்தவித முயற்சியும் அவர்கள் எடுப்பதில்லை.

தீய பழக்கங்கள் இளமையில் தொடங்கும். கட்டுப்பாடில்லாமல் பணத்தை விரயமாக்கும் பழக்கம் பெரியவர்களாக வளர்ந்த பிறகும் தொடரும்.

இப்படியொரு குறிப்பு சிங்கப்பூர் தமிழ் முரசு பத்திரிகையில் வரும் ஒரு பத்தியில் பார்த்தேன். இது நமது இளைஞர்களுக்கும் பொருந்தும் என்பதால் இங்கு இதை எழுதித் தந்திருக்கிறேன்.

- வாசகர்
மு.கோ
யாழ்ப்பாணம்.

# பிரச்சினைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர் கொள்ளும் மட்டக்களப்பு மாவட்டம்!



அரியநேந்திரன் - பா.உ. உடன் ஒரு நேர்காணல்

**ஊடகவியலாளர்களுக்கு மட்டு மல்லாது, சாதாரண பொது மக்களுக்கும் நாளாந்தம் அச்சுறுத்தல் விடுவிக்கும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் இருக்கிறது. இராணுவ நெருக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடுத்த கட்ட நிவாரணப் பணிகள் முடக்கத்தில் கிடக்கின்றன. தற்போதைய ஜனாதிபதித் தேர்தல்களிலும் கூட எந்தவித கரிசனையும் காட்டாத நிலையில் இந்தப் பகுதி மக்கள் வாழ்கின்றார்கள். இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களின் அட்டகாசங்களும் குறைந்தபாடில்லை.**

இவ்வாறு பல கோணங்களில் பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்கி வரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலவரங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் நமது ஈழநாடுக்கு வழங்கிய செவ்வி இது வாகும் -

**இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்பான நிலவரங்கள்?**

➤ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து - இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று திரும்பும் மக்கள் மீது இந்தக் கெடுபிடிகள் அதிகரித்திருக்கின்றன. இந்த மக்கள் மீது உடற்சோதனைகள் உட்பட பல்வேறு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக செங்கலடி, கறுத்த பாலம், மண்முனைத்துறை உட்பட சோதனை நிலையங்களில் இந்தக் கெடுபிடிகள் அதிகரித்திருக்கின்றன.

எனவே, இந்தச் சோதனை நிலையங்களூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் அச்சத்துடன் நாளாந்தம் பயணிக்க வேண்டியுள்ளது.

தற்போது பெரும்போக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கூட தமக்குத் தேவையான விவசாய உள்ளீடுகளைத் தேவைக்கேற்றவாறு கொண்டு செல்ல இராணுவம் தடை விதித்து வருகிறது.

இதனைவிட நகர்ப் புறங்களில் செல்லும் வாகனங்கள் கூட, தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டு வருகிறது.

இவ்வாறான கெடுபிடிகள் தொடர்பாக நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தும், இதுவரை எந்தப் பயனும் எட்டியதாகத் தெரியவில்லை.

**குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் உட்பட ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திகள் எந்த நிலையில் இருக்கிறது?**

➤ சுனாமியால் பாதிக்கப்பட்டு இன்று 10 மாதங்களை எட்டியிருக்கிற நிலையிலும், பாதிக்கப்பட்ட மக்கள் இடைத்தங்கல் முகாமைவிட்டு மீள முடியாத அளவில்தான் இந்த மக்களின் நிலை இருக்கிறது. இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் திட்டங்களிலும் கூட, சிறிலங்கா அரசு கரிசனை காட்டுவதாகத் தெரியவில்லை.

இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்கென 119 தொண்டு நிறுவனங்கள் சேவையாற்றியிருக்கின்ற போதிலும், இடைத்தங்கல் முகாம் மக்கள் தொடர்ந்தும் இடைத் தங்கல் முகாம்களிலோயே வாழ்ந்து வருகின்றனர்.

சுனாமி பாதிப்பு ஏற்பட்டு 10 மாதங்களின் பின்னர்தான், கடந்த 03.11.2005 அன்று சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு குருக்கள் மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கட்டடப்பணிகள் பூர்த்தியாவதற்கு இன்னும் 6 மாதங்களாகும்.

சுனாமி அபிவிருத்தியில் இவ்வாறு ஏற்படும் அபிவிருத்தித் தாமதங்களை கருத்திற்கொண்டு, மட்டக்களப்பில் இருக்கின்ற 4 கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தலா ரூபா 25 லட்சம் ஒதுக்கீடு செய்து, காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலயத்தின் நான்கு கட்டட நிர்மாணப் பணிகளை நாங்களாகவே மேற்கொண்டோம்.

இவ்வாறு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைப்பாடு இருக்கும் போது, ஏனைய சாதாரண அபிவிருத்திகள் குறிப்பிடக்கூடியவாறு நடந்ததாக இல்லை.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான படுவான்கரை பிரதேசத்தின அபிவிருத்திகள் - சிறிலங்கா அரசால் திட்டமிட்டு, புறக் கணிக்கப்பட்டு வருகின்றது என்றே கூறவேண்டும்.

**தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகள் தொடர்பிலான நிலைப்பாடுகள்?**

➤ இந்த நிலைப்பாடுகளைப் பொறுத்தளவில் இப்பொழுது கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சில அரசியல் வாதிகள் தமது அரசியல் நலனுக்காக இந்தத் தமிழ் முஸ்லிம் உறவுகளைப் பிரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றபோதிலும், முஸ்லிம் மக்கள் இந்த உறவுகளில் நல்ல விழிப்புணர்வுடன் இருப்பதை அவதானிக்க முடிகிறது. விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவ்வப்போது முஸ்லிம் மக்களைச் சந்தித்து, அவர்களது பிரச்சினை களுக்குத் தீர்வு கண்டு வருகின்றோம். இந்த வகையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் சுதந்திரமாகச் சென்று, தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். 1990 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியும், அதன் பின் ஆட்சிக்கு வந்த கட்சிகளும் ஊர்காவற் படை என்ற போர்வையில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பினூடாக இந்த தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையேயான உறவுகளில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது.

இப்பொழுது எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ள விழிப்புணர்வின் ஊடாக முஸ்லிம் மக்கள் உண்மையான நிலைப்பாட்டை அறிந்திருக்கின்றார்கள். தமிழ் முஸ்லிம் மக்கள் பிரிந்து வாழ முடியாது என்ற உண்மையையும் விளங்கியிருக்கிறார்கள்.

**மட்டக்களப்பில் ஊடகத்துறை செயற்பாடுகள் முடங்கிப்போயிருப்பதாகவே தெரிகிறது. கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது இது தொடர்பான கருத்துகள்?**

➤ உண்மையில் ஊடகவியலாளர் நடேசன், சிவராம் ஆகியோரின் கொலைகளுக்குப் பின்பு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் கூட இன்று உயிருக்கு அஞ்சி வெளிநாடுகளில் வாழ்ந்து வருகிறரார்கள். இருந்தாலும், ஒரு சில ஊடகவியலாளர்கள் மட்டக்களப்பில் இருந்து செயற்பட்டு வருகின்றார்கள். இவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் பாராட்டுகிறோம்.

இந்தச் செயற்பாட்டுக்கும் சிறிலங்கா அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், மட்டக்களப்பு விநியோகஸ்தர்கள் கூட சுட்டுக் கொல்லப்படும் நிலையில் தான் மட்டக்களப்பில் ஊடகச் சுதந்திரம் இருக்கிறது. இந்தப் பத்திரிகை சிறிலங்காவில் பதிவு செய்யப்பட்ட ஒரு பத்திரிகையாக இருந்த போதிலும், இந்தப் பத்திரிகை நகர்ப் புறத்தில் விற்பனை செய்யப் படுவதற்கு இவ்வாறான கொலைகள் அச்சுறுத்தலாக இருக்கிறது.

சிறிலங்காவில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகை ஒன்று, சிறிலங்கா இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் விற்பனை செய்யமுடியாத நிலையில் இருக்கிறதென்றால், ஊடக சுதந்திரத்தைப் பற்றி வேறு உதாரணங்களைச் சுட்டிக் காட்ட அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன்.

**சம காலத்தில் இந்தத் தேர்தல் முஸ்தீபுகளில் மட்டக்களப்புத் தமிழ் மக்கள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.?**

➤ இந்தத் தேர்தல் என்ன, சிறிலங்காவில் நடக்கும் எந்தத் தேர்தலிலும் தமிழ் மக்கள் அக்கறை கொண்டதாக இல்லை. ஏனென்றால், எந்த தேர்தலில் யார் சிறிலங்காவின் ஜனாதிபதியாக வந்தாலும், தமிழ் மக்களுக்கு அவர் விமோசனம் பெற்றுத்தரப்போவதில்லை என்பதை தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பட்டுத் தெளிந்திருக்கிறார்கள். எனவே, இந்தத் தேர்தலிலும் தமிழ் மக்கள் அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இது நியாயமானதும் கூட. ❋

**நேர்காணல்**
**சுசிதன்**

# கற்றல் வளம் வீடியோ இறுவட்டு ஒரு கண்ணோட்டம்

'கலை கலைக்காகவேடு என்ற கோட்பாட்டுடன் அது சமூகத்தின் பால் அக்கறை கொள்ளவேண்டும் என்ற கொள்கையில் தீவிரப் போக்குடன் இயங்குபவர்களில் ஓவியக் கலைஞர்களும் ஒரு முக்கியமானவர்கள். சித்திரப்பாட கட்புலச் சாதனங்களில் புரட்சியை ஏற்படுத்திய 'கற்றல் வளம்' (இலங்கைக் கலை ) வீடியோ இறுவட்டு சித்திரப் பாட மாணவர்களுக்குக்கிடைத்தபெரும்கொடையாகவே கருதமுடியும்.

கற்றல் வளம் வீடியோ இறுவட்டை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சித்திரப்பாட ஆசிரியரும், ஐ.ஏ. ரி.சித்திரப் பயிற்சி நிறுவன இயக்குநருமான துரை வீரசிங்கம் துசியந்தன் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் கலை







வளர்ச்சிக் காலங்களான அநுராதபுரம், பொலநறுவ, கண்டி, கொழும்பு ஆகிய காலகலைப் படைப்புகளைத் தாங்கிய தான கற்றல் வளம் வீடியோ இறுவட்டு, சித்திரப்பாட மாணவர்களுக்கு மட்டுமே பயனுள்ளதென்று வைத்து விடமுடியாது. சமூகக் கல்வியும் வரலாறும் கற்கும் மாணவர்களுடன், இந்தக் கலைப் படைப்புக்களைத் தாங்கியுள்ள இடங்களுக்குச் சுற்றுலா சென்றவர்களுக்கும் கடந்த கால நினைவுகளின் நிழல்களை கொடுக்க வல்ல இறுவட்டு இதுவாகும். பல பரிமாணங்களில் பயன் தரக் கூடிய கற்றல் வளம் வீடியோ இறுவட்டு, துறை சார்ந்த ஒவ்வொருவருக்கும் பெரும்துணை புரியும் என்பது மறுக்க முடியாத உண்மை.

தனியே நிழல்படங்களையும் அதற்கான சுருக்க விளக்கக் குறிப்புகளையும் கற்ற மாணவர்களுக்கு (சித்திரம், சமூகக் கல்வியும் வரலாறும்) முற்றிலும் வேறுபட்ட வகையில் மாணவர்களை அந்தச் சூழலுக்கு அழைத்துச் சென்று, அந்தப் பகுதியுடன் அவர்களை இரண்டறக் கலக்கின்ற வகையில் ஆசிரியர் கை யாண்ட யுக்தி வெற்றியளித்துள்ளதென்றே கூறவேண்டும்.

(உதாரணமாக சிகிரியா மலைக் குன்றை ஒவ்வொரு பகுதியாக விபரிக்கையில் மென்மை யான வீணை இசையுடன் பின்னணியில் விளக்கவுரை ஒலிக்கும்)

சித்திரப் பாடத்துக்கென தமிழ் மொழி மூலமான நூல்கள் மிகமிகக் குறைவென்பது துறை சார்ந்தவர்களின் குறைமட்டுமே. இதனை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளைத் தேடமுற்பட்டவர்களில் து.துசியந்தன் சற்று வித்தியாசப்பட்ட, காலப்பொருத்தப்பாடான ஊடகத்தை தேர்ந்துள்ளார்.

ஆசிரியரின் தந்தையார் துரை வீரசிங்கம் ஓய்வு பெற்ற சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர், சகோதரி சித்திரப் பாட ஆசிரியை, இந்தக் குடும்ப ரீதியான ஒன்றிப்பும், அர்ப்பணிப்பும், தூரநோக்குமே இந்தப் பெரும் முயற்சிக்குக் காரணம் என்று கூறலாம்.


இன்றைய நவீன இலத்திரனியல் சாதனங்களின் அதீத பாவனையில் சித்திரப்பாட விடயப் பரப்புக்களையும் இதனுள் உட்புகுத்தியமை ஆசிரியரின் சமகால இயல்பு இயங்கு நிலைக்கு சான்றாக அமைகின்றது.

கற்றல் வளம் வீடியோ இறுவட்டு நான்கு இறுவட்டுக்களாக நான்கு கலைக் காலங்களையும் உள்ளடக்கியதாகவுள்ளமை பாவனைக்கு இலகுவாகவுள்ளது. தொடர்ச்சியான வீணை இசை ஒருவித சலிப்பை ஏற்படுத்துகிறது. ஏனெனில் பழக்கப்பட்ட இசை என்பதுடன், கையாளப்பட்ட முறையும் பெரும் பொருத்தப்பாடாக அமையவில்லை. பின்னணிக் குரலில் எதுவித மாறுதல்களும் ஏற்படவில்லை. ஒரே நிலையிலேயே ஒலித்துக் கொண்டிருந்தமை சோர்வைத் தோற்றுவிக்கிறது.

இருவரின் குரலில் களநிலைக்கு ஏற்ப மாறுபட்ட தன்மையில் பின்னணிக்குரல் ஒலித்திருந்தால் மேலும் சிறப்பைப் பெற்றிருக்கும். கலைக் காலங்களிலுள்ள விளக்கப்படத்துக்கான இசை, விகாரை, தேவாலயம், கோயில் ஆகியவற்றுக்கு ஒருவித மென்மையான இசையும், சிற்பங்களுக்கும் கலை எச்சங்களுக்கும் அதன் தன்மைகளுக்கமைவாக இசை அமைப்பில் மாறுதல்கள் இடம் பெற்றிருந்தால் தனிச் சிறப்பை தனதாக்கியிருக்கும்.

இதுவரை எவரும் சிந்திக்காத இந்தக் கடின முயற்சிக்குச் செயல் வடிவம் கொணர்ந்த ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியவர். மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள், துறை சார்ந்தவர்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டிய விடயம். மிகவும் பயனுள்ள கட்புல சாதனத்தை வெளியிட்டமையால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அந்தந்த இடங்களில் நின்று கற்பிக்கின்ற, கற்கின்ற உணர்வை, அனுபவத்தை கற்றல் வளம் வீடியோ இறுவட்டு ஏற்படுத்து மென்பது யதார்த்தம்.

**இ.விஜேந்திரன்**



சீனாவின் பீஜிங் நகரில் உயரமான கோபுரத்திலிருந்து பரசூட் மூலம் குதிக்கும் சாகச நிகழ்வு நடைபெற்றுவருகிறது. 25 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இதில் கலந்துகொண்டனர். அங்குள்ள 405 மீற்றர் உயர கோபுரத்திலிருந்து தனது நாட்டு கொடியுடன் ஒரு வீரர் பரசூட் மூலம் குதிக்கும் காட்சி.

# வெள்ளிக் கிரக தகவல்களை அறிய வீனஸ் விண்கலம் அனுப்பப்படுகிறது

மொஸ்கோ—

வெள்ளிக்கிரகம் பற்றித் தகவல்களைத் திரட்டுவதற்காக விண்கலம் ஒன்று அந்தக் கிரகத்துக்கு ரஷ்யாவிலிருந்து நாளை விண்ணில் செலுத்தப்படுகிறது.

சூரிய மண்டலத்திலுள்ள செவ்வாய், சனிக் கிரகங்களைப்பற்றி ஆராய்வதற்காக விண்கலங்களை அமெரிக்கா அனுப்பியுள்ளது. இந்த நிலையில் வெள்ளிக்கிரகம் பற்றி ஆராய்வதற்காக ஒரு விண்கலத்தை ஐரோப்பிய விண்வெளி நிலையம் அனுப்பவுள்ளது.

இதற்காக வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற விண்கலம் நாளை அனுப்பப்படுகிறது.

ஐரோப்பிய விண்வெளி நிலையம் இந்த விண்கலத்தை ரஷ்ய ரொக்கெட் மூலம் அனுப்புகிறது. கஜகஸ்தான் நாட்டிலுள்ள பைக்கானூர் விண்வெளி நிலையத்திலிருந்து இந்த விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்படுகிறது.

வீனஸ் எக்ஸ்பிரஸ் வெள்ளிக்கிரகத்தை அதன் சுற்றுவட்டப் பாதையில் சுற்றி அதைப்படம் எடுத்து அனுப்பும்.

வெள்ளிக்கிரகம் பூமியைப் போலவே 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானது. அண்ட வெளியில் சுற்றிவந்த தூசு மற்றும் கியாஸ் ஆகியவற்றிலிருந்து இது உருவானது. இதன் அளவும் அடர்த்தியும் பூமியைப் போன்றே இருக்கும்.

வெள்ளிக்கிரகத்தில் தண்ணீர் கிடையாது. அதன் வாயுமண்டலம் காபனீரொக்சைட் வாயுவால் ஆனது. இதன் மேகங்கள் கந்தக அமில வாயுவால் ஆனது.

சூரிய மண்டலத்திலேயே வெள்ளிக் கிரகத்தில்தான் வெப்பம் அதிகம். அங்கு வெப்பநிலை 47.7 செல்ஷியஸ் ஆகும்.

## 25 வருடங்களுக்குப் பின்னர்

# ஈராக் பயணிகள் விமானம் ஈரானில் தரையிறங்கியது!

தெஹ்ரான்—


ஈரானுக்கும், ஈராக்கிற்கும்இடையே எட்டு ஆண்டுகள் இடம்பெற்ற எல்லைப்புற மோதலையடுத்து கடந்த 25 வருங்களுக்குப் பின்னர் ஈராக்கிய பயணிகள் விமானமொன்று ஈரான் தலைநகர் தெஹ்ரானிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் நேற்று தரையிறங்கியது.

இந்த விமானத்தில் ஈராக்கிய அதிகாரிகள் உட்பட 65 பயணிகள் வந்ததாக ஈரான் விமான போக்குவரத்து அதிகாரி நீசா ஜபார்சாடி தெரிவித்தார்.

ஆனால், ஈரானிலிருந்து பயணிகள் விமானம் ஈராக்கிற்கு செல்வதெனில் அதற்கான பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டாலே தமது விமான சேவை மீள ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

ஈராக்கிலிருந்து ஈரானுக்கான தொடர் விமானசேவை எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஈராக்கின் ஸ்திரத்தன்மைக்கு ஈரான் தன்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குமென ஈரானுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த ஈராக் துணைப் பிரதமர் அகமட் சலாபியிடம் ஜனாதிபதி அகமதினியாத் தெரிவித்தார்.



அத்துடன், ஈராக்கின் இறைமை, ஒருமைப்பாடு, சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு ஈரானுக்கும் உள்ளது. ஈரானின் அனுபவம் - நிபுணர்களின் ஒத்துழைப்புடன் ஈராக்கை கட்டியெழுப்ப முடியும் எனவும் அகமதினியாத் தெரிவித்தார்.

ஈராக்கில் போர்நடைபெற்ற வேளை வொஷிங்ரனின் விருப்பத்துக்குரிய தலைவராக சலாபி இருந்தார்.

ஆனால், ஈரான் குறித்த அமெரிக்காவின் இரகசியங்களை கடந்த வருடம் இவர் கசியவிட்டாரெனத் தெரிவித்து அமெரிக்காவின் ஆதரவை இழந்தார்.

ஆனால், அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டை சலாபி நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் மீண்டும் புயல் 18 பேர் பலி; 1000 வீடுகள் சேதம்!

வொஷிங்ரன்—

அட்லாண்டிக் மற்றும் கரிபியன் கடல் பகுதியில் கத்ரீனா, ரீட்டா என பல்வேறு பெயர்களில் உருவான புயல் அமெரிக்காவில் புளோரிடா, லூசியானா, அலபாமா, மிசிசிப்பி ஆகிய மாகாணங்களை தாக்கியதில் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர்.

கியூபா, மெக்ஸிக்கோ நாடுகளையும் இந்த புயல்கள் தாக்கி கடும் சேதத்தை ஏற்படுத்தின. புயல் பாதிப்பிலிருந்து அமெரிக்க மக்கள் இன்னும் மீளாத நிலையில் - அமெரிக்காவின் இருண்டியானா மாகாணத்தை நேற்றுமுன்தினம் மீண்டும் புயல் தாக்கியது.

இதில் 1000 இற்கு மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமானதில் 18 பேர் பலியாகினர்.

வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் தூக்கி வீசப்பட்டன. கென்டகி பகுதியிலும் இந்த புயல் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

## உலக நோக்கு

# பாகிஸ்தானில் மீண்டும் பூகம்பம்

இஸ்லாமாபாத்—

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் காலை 7.12 மணியளவில் மீண்டும் பூகம்பம் தாக்கியது. இஸ்லாமாபாத், பெஷாவர்பாலக், கோட் மாலாகண்ட், ஸ்வாட் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரான முசாபராபாத் ஆகிய நகரங்கள் குலுங்கின. ரிக்டர் அளவில் 6 ஆக பூகம்பம் பதிவானது. இதனால் சேதமோ, காயமோ ஏற்படவில்லையென்று கூறப்படுகிறது.

பெஷாவர் அருகே உள்ள ஹசாரா டிவிஷனில் பூகம்பத்தின் மையம் இருந்தது.

கடந்த மாதம் 8 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் 73 ஆயிரம் பேர் பலியாகியதுடன், 63 ஆயிரம் பேர் காயமடைந்தனர். அதன்பின்னர் 1000 முறை பூமி குலுங்கியுள்ளது. அதில் நேற்றுமுன்தினம்தான் பூகம்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்தது.

நேபாளத்திலும் பூகம்பம் ஏற்பட்டது. அங்கு 5.5 ரிக்டர் அளவில் அதன் தாக்கம் இருந்தது.

# சோமாலிய பிரதமர் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

மகாதிசு—

சோமாலியப் பிரதமர் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. இந்த கொலை முயற்சியிலிருந்து அவர் தப்பிவிட்டார். அவரது மெய்ப்பாதுகாவலர்கள் 3 பேர் பலியாகினர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் ஏற்கனவே பஞ்சம், பசி பட்டினி தலைவிரித்தாடுகின்றது. இந்த நிலையில் உள்நாட்டுக் கலவரமும் அந்த நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் அமைதியான வாழ்க்கையையும் பாதித்துள்ளது. 14 ஆண்டுகளாக அங்கு நிரந்தரமான அரசு மற்றும்நாடாளுமன்றம் அமையவில்லை.

இப்போது இடைக்கால அரசின் பிரதமராக இருப்பவர் முகமது கெடி. பாதுகாப்புக்கருதி இவர் தலைநகரில் தங்காமல் அதன் அருகேயுள்ள வேறொரு நகரில் தங்கி வந்தார்.

நேற்று முன்தினம் அவர் விமான நிலையம் சென்றுவிட்டு தலைநகர் மகாதிசுவுக்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரது எதிர்ப்பாளர்கள் காரை நோக்கி சரமாரியாக சுட்டனர். வெடிகுண்டுகளையும் வீசினர்.

இதையடுத்து பின்னால் வந்த பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள் நீண்டநேரம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் பிரதமரின் மெய்ப்பாதுகாவலர்களில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# பாரிஸில் தொடரும் வன்முறை: 1408 வாகனங்கள் தீக்கிரை!

பாரிஸ்—


பிரான்ஸ் தலைநகர் பாரிஸை சூழவுள்ள பகுதிகளில் இடம்பெற்று வரும் வன்செயல்களில் இதுவரை 1408 வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன், 982 வாகனங்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

இதேவேளை, வன்முறையாளர்களால் நடத்தப்பட்ட பதுங்கித் தாக்குதலில் இரண்டு பொலிஸார் காலிலும், தொண்டையிலும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாரிஸின் தென்பகுதி நகரான ரொலோஸில் வன்முறையாளர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பிரயோகித்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் முதன்முறையாக ஊடகவியலாளர்கள் முன் தோன்றிய ஜனாதிபதி ஜக் சிராக் -

சட்டமே இறுதிமுடிவைக் கொடுப்பதாக இருக்கவேண்டும். குற்றம் புரிந்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் கைதுசெய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவர். சட்டம் சகலருக்கும் சமமாகவே பேணப்படும். எனத் தெரிவித்தார்.



கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடங்கிய வன்செயல்கள் குறித்து ஜனாதிபதி சிராக் வெளிப்படையாக எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லையென எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வந்தவேளை, ஜனாதிபதி சிராக் ஊடகவியலாளர் முன் கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரம்மாண்ட கிறிஸ்மஸ் தாத்தா

வொஷிங்ரன்—

அடுத்த மாதம் கிறிஸ்மஸ் பண்டிகை வரவிருப்பதை தொடர்ந்து கிறிஸ்மஸ் தாத்தாக்களுக்கு பயிற்சி வகுப்புகள் தொடங்கிவிட்டன. கிறிஸ்மஸ்தாத்தா சிலைகளும் தயாராகி வருகின்றன.

அமெரிக்காவின் மிச்சின் மாகாணத்தில் உள்ள மிட்லாந்தில் கிறிஸ்மஸ் தாத்தா பயிற்சிப் பள்ளி உள்ளது.

1937 ஆம் ஆண்டு முதல் இந்த பள்ளியில் பல்வேறு நாடுகளிலுமிருந்து கிறிஸ்மஸ் தாத்தா பயிற்சிக்கு மாணவர்கள் வருகின்றனர்.

அந்தப் பள்ளியில் பிரமாண்ட கிறிஸ்மஸ் தாத்தா சிலை அமைக்கும் பணியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த கிறிஸ்மஸ் தாத்தா சிலையின் தலையின் உயரம் மட்டும்15 அடி

# இந்தியாவின் முதல் பீல்ட் மார்ஷல் வைத்தியசாலையில் அனுமதி!

புதுடில்லி—

இந்தியாவின் முதல் பீல்ட் மார்ஷல் மானேக்ஷா மூச்சுத் திணறல் மற்றும் சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டதால் டெல்கி இராணுவ மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராணுவ சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திலுள்ள வெல்லிங்டனில் வசித்துவந்த 91 வயதான மானேக்ஷா தனி விமானம் மூலம் டெல்கிக்கு அழைத்து வரப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அங்கு விஷேட டொக்டர்கள் குழு அவருக்கு சிகிச்சை அளித்து வருகிறது.

## மருத்துவ உலகில் அதிசயம்

# தாயின் வயிற்றில் எட்டு வருடங்கள் வளர்ந்த இரட்டைக் குழந்தைகள்!

ஓரிசா—

ஓரிசா மாநிலம் பிஜப்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கனகா பாகர் (வயது 47) இவருக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். இதனால் இவர் கருத்தடை சத்திரசிகிச்சை செய்தார்.

இந்த நிலையில் 1997 ஆம் ஆண்டு மீண்டும் அவர் கர்ப்பமானார். கருத்தடை செய்த பின்பும் கர்ப்பம் அடைந்ததால் கனகா அதிர்ச்சியடைந்தார்.

ஏற்கனவே மூன்று பெண் குழந்தைகள் இருப்பதால் டொக்டரின் உதவியுடன் கருவைக் கலைத்தார்.

இந்த நிலையில் கனகாவுக்கு சில நாட்களுக்கு முன் வயிற்றுவலி வந்தது. இதனையடுத்து சம்பல்பூரில் உள்ள மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த டொக்டர்கள் அதிர்ச்சியடைந்தனர். கனகாவின் வயிற்றில் தலை மற்றும் எலும்புகள் வளர்ந்த நிலையில் அரைவாசி வளர்ச்சியடைந்த இரட்டைக் குழந்தைகள் இருந்ததைக் கண்டுபிடித்தனர். இதனையடுத்து சத்திரசிகிச்சை செய்து இரட்டைக் குழந்தைகளை வெளியில் எடுத்தனர்.

இதுகுறித்து சத்திரசிகிச்சை மேற்கொண்ட டொக்டர் ஜக்மோகன் மிஸ்ரா கூறியதாவது -

எங்கள் அனுபவத்தில் நீண்ட நாட்கள் எவ்வித கெடுதலுமின்றி தாய் வயிற்றில் கரு இருந்தது இது முதல் சம்பவமாகும். தம்பதியினர் 1997 ஆம் ஆண்டு கருச்சிதைவு செய்தபோது கருப்பையிலிருந்து கரு வெளிப்பட்டு வெளியே தங்கியுள்ளது.

ஆனாலும் இது எப்படி ஏற்பட்டது என்பது குறித்து குழம்பிப்போய்விட்டோம்.

இப்போது சுமார் 5 மணிநேரம் சத்திரசிகிச்சை செய்து அரை வளர்ச்சியடைந்த கருவை வெளியே எடுத்தோம். தற்போது தாய் நலமாக உள்ளார். கருவை ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக வைத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் பகுதியிலுள்ள வாக்காளர்களை இனங்காணும் நடைமுறைகள் அறிவிப்பு!

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் - எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்துவது தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக உயர் நீதிமன்றம் நாளை அறிவிக்கவுள்ளது.

வடக்கு- கிழக்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்குச் சாவடிகளை அமைக்க வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த பின்னரே பிரதான நீதியரசர் சரத் என் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை முற்போக்கு முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான நெல்சன் பெரேரா தாக்கல் செய்திருந்த மனுமீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

இதன் போது வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பத்து விடயங்கள் அடங்கிய கடிதத்தை சட்ட மா அதிபர் ஊடாக தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இது தொடர்பாக நாளை உயர் நீதிமன்ற வாக்களிப்பு நடைமுறைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கடற்கொந்தளிப்பு மீனவரைக் காணவில்லை!

மன்னார்—

மன்னார் கடலில் ஏற்பட்டுள்ள கடற்கொந்தளிப்பினாலும், அதனு டன் கூடிய பலத்த காற்றினாலும் தலைமன்னார் பழைய பாலம் தென்கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் படகு கவிழ்ந்து காணாமற் போயுள்ளார்.

காணாமற்போனவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 34வயதுடைய கிளிஐயா எனத் தெரியவந்துள்ளது.

பழைய பாலம் கடற்கரையிலிருந்து காணாமற்போன மீனவரும் மற்றொரு மீனவரும் கரையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் கடலில் செல்கையில் கொந்தளித்துக் கொண்டிருந்த கடல் தாக்கத்தாலும் கடும் காற்றாலும் அவர்களது படகு கவிழ்ந்தது.

படகில் சென்ற ஒருவர் மட்டும் கரை திரும்பிய நிலையில் மற்றொரு மீனவர் காணாமற் போயுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் நடந்த போதும், இது வரை காணாமற்போனவர் கரை சேரவில்லை. அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் மீனவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

## 16ஆம், 17ஆம் திகதிகளில்...

தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள வன்னி மாவட்ட வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஓமந்தை, உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது எதிர்வரும் 16, 17 ஆகிய இரு தினங்களும் ஓமந்தை, உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடியூடாகப் பொதிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் போக்குவரத்தை நிறுத்துவது என்றும் -

இந்த இரு வீதிகளுக்கு ஊடாகச் செல்லும் பயணிகள் போக்குவரத்தை தேர்தல் தினத்தன்று நிறுத்தி அத்தியாவசிய தேவைகளுக்காகச் செல்லும் பயணிகளை மட்டும் அனுமதிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை- வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் வாக்காளர்கள் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதிப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுட்டுக்...

கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் எதிர்கொண்ட நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகஅக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

## தொடரும்...

இதேவேளை - கடந்த இரண்டு நாட்களாக பெய்த அடைமழையால் குடாநாட்டிலும் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவைகள் குறைவாக இருந்ததுடன் அரச அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் அலுவலர், ஆசிரியர்கள், மாணவர்கள் வரவு பெரிதும் குறைந்திருந்தது. நேற்று மாலை வரை விடாது கொட்டிய மழையால் வீடுகளை விட்டு வெளியேறாமல் மக்கள் முடங்கிக் கிடந்தனர். மாலையில் மழை ஓய்ந்ததும் வீதிகள், கடைகள் களை கட்டின. நேற்று கந்தசஷ்டி இறுதி நாளான சூரசங்கார உற்சவங்களில்-மழை விட்டபின்னரே பெருமளவான மக்கள் பங்கேற்றனர்.

அதேவேளை - குடாநாட்டின் வடக்கு கரையோரப் பகுதி மக்கள் மத்தியில் இந்த மழையை அடுத்து பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. கடல்மட்டம் உயர்ந்துள்ளதுடன் கடற்கொந்தளிப்பும் அதிகமாக உள்ளதால் கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லத் தயாரான நிலையில் உள்ளனர்.

கடற்தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாது - தமது கடற்தொழில் உபகரணங்களை கரையில் ஏற்றிவிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தபால் மூலமான...

இந்தப் புறக்கணிப்பால் யாழ். குடாநாட்டில் சில திணைக்களங்கள், அரச அலுவலகங்களில் எந்தவொரு வாக்கும் பதிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தால் - இந்த வாக்களிப்பு நிலையத்தில் எவரும் வாக்களிக்கச் செல்லவில்லை.

அதேவேளை - யாழ். பிரதம தபாலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களில் முற்றுமுழுதான புறக்கணிப்பு இடம்பெற்றதாகவும் - தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபோன்றே கிளிநொச்சியிலும் தபால் வாக்களிப்பில் விரல்விட்டு எண்ணக் கூடியோரே பங்குபற்றியதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் பதிவுசெய்யப்பட்ட தபால் வாக்காளர்கள் சிறியளவானோரே தமது வாக்குகளைச் செலுத்தியதாகவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டத்திலிருந்து சுமார் மூவாயிரம் பேர் தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றிருந்தனர்.

அதேவேளை- ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பு நேற்று வன்முறை ஏதுமின்றி நடைபெற்றதாகவும் நாடுமுழுவதும் 75 வீதமான வாக்குப்பதிவு இடம் பெற்றதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். 3இலட்சத்து 23 ஆயிரத்து 428 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

அம்பாறை மற்றும் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தபால் மூலம் வாக்களிக்க கல்முனைக்குச் செல்ல வேண்டியிருந்ததால் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த வாக்களிப்பு பொதுவாக வன்முறைகளின்றி அமைதியான முறையில் நடைபெற்றதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோவும்தெரிவித்தார்.

பொலன்னறுவையில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் அரைவாசிப் பேரளவில் வாக்களித்துள்ளதாகத் தெரியவருகிறது. இன்றும் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும்.

## வரவு - செலவு திட்டம்...

வறுமையை ஒழிப்பது என்பனவாகும். இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் புதிய தொரு அபிவிருத்தி தசாப்தமொன்றை ஏற்படுத்த நாம் உத்தேசித்துள்ளோம்.

எவ்வாறு நிறைவான அபிவிருத்திக்கான அடித்தளமொன்றை இடப் போகின்றோமென்பது குறித்த சகல விடயங்களையும் இன்று வெளியிடவுள்ளோம்.

பிரதான கட்சிகள் இரண்டின் வேட்பாளர்கள் இருவரும் முன்வைத்துள்ள அவர்களின் வேலைத்திட்டங்கள் மூலம் எட்டு தொடக்கம் பத்து வீதத்துக்கிடைப்பட்ட பகுதியில் பொருளாதார வளர்ச்சி ஒன்றை இலக்காக் கொள்ள வேண்டுமென்பதே எமது நோக்கமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தை பகிஷ்கரிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை இலக்காக கொண்டே வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐ. தே. கட்சி தெரிவித்துள்ளது.

## ஐஸ்மஞ்சுவின்...

கொலை செய்த பின்னர் மஞ்சு முதலாவதாக அழைத்த நபர் தாம் கைது செய்த சந்தேக நபரெனவும் இவர் மூலம் மஞ்சு பற்றிய மேலதிக தகவல்களைப்பெற முடியுமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மஞ்சுவை கைதுசெய்வதற்காக பல பொலிஸ் பிரிவுகள் வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மஞ்சு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நீண்ட காலமாக இருக்க முடியாதெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆதரவை விலக்கிக்கொள்ள...

சீர்குலைக்க இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைப்படைகளைப் பயன்படுத்தினாலோ, அன்னிய நாட்டுப் படைகளை வரவழைத்தாலோ ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை நாம் விலக்கிக் கொள்வதோடு ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளருக்கு எதிராக நாம் செயற்படுவோம்.

நவீன் திசநாயக்க தெரிவித்திருக்கும் சதி தொடர்பாக உரிய விளக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்காவிட்டால் நாம் எமது ஆதரவை மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

எமது கருத்தை ஏற்றுக் கொண்டு உரிய விளக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி அளிக்க வேண்டும். அப்போது தான் மலையக மக்கள் முன்னணி நம்பிக்கை கொள்ளும் என்று பெரியசாமி சந்திரசேகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டம் கினிகத்தென்னவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திசநாயக்க ரணிலின் சதித்திட்டம் குறித்து வெளிப்படுத்தியிருந்தார். இங்கு பேசிய அவர்-

சமாதானத்தை உருவாக்கும் முயற்சியாக மூன்றாம் தரப்பான நோர்வேயின் அனுசரணையுடன் வெளிநாடுகளில் சிலமுறை அமைதிப் பேச்சுக்களை நடத்தினார்கள்.

அப்பொழுது கருணாவை இந்தச் சமாதானப் பேச்சுக்கு வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதித்தது விடுதலைப் புலிகள் அமைப்பு. அதன் மூலம் அவர் வெளியுலக அனுபவத்தைப் பெற்றார். பின்னர் அரசாங்கத்தின் ஆதரவுடன் தான் தனியாகக் குழுவை அமைத்துப் புலிகளுக்கு எதிராகச் செயலாற்றச் சென்றார். இவ்வாறு அமைந்ததற்குக் காரணமே ரணில் விக்கிரமசிங்கதான்.

இந்த நிலைமைகளையும் மீறி யுத்தம் ஒன்றைப் பிரபாகரன் ஆரம்பித்தால் அந்த யுத்தத்துக்கு எங்கள் இராணுவத்தை நாம் அனுப்ப வேண்டியதில்லை அதற்குப் பதிலாக இந்திய இராணுவமும், அமெரிக்க இராணுவமும்தான் அத்தகைய யுத்தத்தில் ஈடுபடும்.

இதற்கான அடிப்படை ஒப்பந்தப் பேச்சுக்களை ரணில் விக்கிரமசிங்க, இந்திய நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியுடனும், அமெரிக்க நாட்டுத் தலைவர் ஜோர்ஜ் புஸ்ஸுடனும் நடத்தியுள்ளார் என நவீன் திசநாயக்க தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுடப்பட்டு...

இவர் கடைக்குப் பொருட்களை வழங்கிவிட்டு வீட்டுக்குத் திரும்பிய போது நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக தெரியவருகிறது. காலில் படுகாயமடைந்த மேற்படி இளைஞர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தம்மிடமுள்ள ஆயுதக் குழுவினர்...

ஊடகவியலாளர்கள் முன்னிலையில் தாங்கள் பிடிக்கப்பட்டது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை இராணுவத்தினரும் - சேர்ந்தியங்கும் குழுவினரும் எப்படி மேற்கொண்டனர், திருமலை கடற்புலிகளின் தளபதி டிக்கானைக் கடற்படையினர் படுகொலை செய்தது உள்ளிட்ட விடயங்களைப் பகிரங்கப்படுத்தினர்.

அங்கு கறுப்பாளையைச் சேர்ந்த சுந்தரம் சுரேஸ் கூறியதாவது -

முறக்கொட்டான்சேனையிலுள்ள உறவினர் வீட்டிலிருந்து கூலிவேலை செய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வெலிக்கந்தையில் இராணுவத்தினர் எம்மைக் கைதுசெய்தனர்.

எம்மைக் கருணா குழு எனக் கூறப்படுவோரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் ஒருநாள் இருட்டு அறைக்குள் வைத்தனர். மறுநாள் சித்தா மற்றும் சிலர் என்னை அவர்களுடன் இணைந்து செயற்படுமாறும், மாதம் 6 ஆயிரம் ரூபா தருவதாகவும் கூறிக் கட்டாயப்படுத்தினர்.

பின்னர் ஆறு நாள் பயிற்சி தந்தார்கள். அதன் பின் என்னையும், வேறு ஒரு பெடியனையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான காக்காச்சிவெட்டைக்கு அனுப்பி வைத்தனர்.

என்னுடன் வந்த இளைஞர் விடுதலைப் புலி உறுப்பினரைச் சுட்டதும் அவரிடம் இருக்கும் அடையாள அட்டை மற்றும் பொருட்களை எடுத்துவருமாறும் கூறியிருந்தார். அதற்காக நான் இங்கு வந்தபோது தான் பிடிபட்டேன். மற்றைய நபர் ஓடிவிட்டார் என்றார் சுந்தரம் சுரேஸ்.

மாங்கேணி - மருதங்குளத்தைச் சேர்ந்த செல்வம் பாபு (வயது 15) கூறியதாவது -

ஓமடியார் மடுவில் வேலைசெய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது கருணா குழுவைச் சேர்ந்த ராஜிகுமார், ரங்கன், மாயவன் ஆகிய மூவரும் என்னைப் பிடித்தனர்.

உனக்கு மாதம் 6 ஆயிரம் ரூபா சம்பளம் தருவோம் எனக் கூறினர். பின்னர் தீவுச்சேனைக்குக் கொண்டு சென்றனர். அங்குதான் அவர்கள் முகாமிட்டுள்ளனர். அங்கு ஐந்து நாள் பயிற்சி தந்தார்கள்.

பின்னர் வாகரை - கட்டுமுறிவு குஞ்சன் குளத்தில் நடைபெற்ற தாக்குதலுக்குக் கூட்டிச்சென்றனர். அங்கு விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் நடத்தினர். இதில் இராணுவத்தினரும் வந்தார்கள். அவர்கள் சிங்களம் பேசினார்கள். பின்னர் மகேசன் என்னும் போராளி மீது கைக்குண்டை வீசிவிட்டு வா உனக்கு 10 ஆயிரம் ரூபா தருவதாகச் சொன்னார்கள். அதன் பின்பு வீட்டுக்குப் போகலாம் எனத் தெரிவித்தனர்.

நான் கைக்குண்டையும் எடுத்துக்கொண்டு விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தேன் என்றார் செல்வம் பாபு.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சண்முகம் சர்வராசா கூறியதாவது -

வெளிநாடு சென்று கட்டாரில் வேலைசெய்துவந்தேன். அப்போது இராணுவத்துடன் உள்ள குழுவைச் சேர்ந்த மார்க்கன் என்னோடு தொடர்பு கொண்டு நீ கொழும்புக்கு திரும்பு - உனக்கு வேறு நாட்டில் நல்ல வேலை பெற்றுத்தருகிறேன் என்று கூறினார். அதனை நம்பி கொழும்பு திரும்பிய போது விமான நிலையத்தில் காத்திருந்த மார்க்கன் என்னை ஏற்றிக்கொண்டு தீவுச்சேனைக்குக் கொண்டுவந்தார்.

சேனபுர என்ற முகாமுக்குக் கூட்டிச் சென்று என்னை படையினரிடம் அறிமுகப் படுத்தினார். இவர் எங்களுடைய ஆள். வெளிநாடு சென்றிருந்தவர் தற்போது வந்திருக்கிறார். இவர் போக்குவரத்துச் செய்யும் போது ஒத்துழைப்பு வழங்குமாறு கூறியிருந்தார்.

தாக்குதலுக்குப் போகும் முன்பு படை முகாமுக்குப் போவார்கள். அங்கு ஆயுதங்கள் துப்பாக்கி ரவைகள் கைக்குண்டுகள் எல்லாம் வழங்கப்படும். ஆமிக்காரர்களும் அவர்களது முகாமுக்கு வந்து போவார்கள். தற்போது தீவுச் சேனையில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவைச் சேர்ந்த 65 பேர் உள்ளனர். இவர்களில் அநேகமானோர் முதியவர்கள். தொழில்லாது துன்பப்பட்டோருக்கு மாதம் ஆறாயிரம் தருவதாக கூறியே இணைத்து வைத்துள்ளனர்.

திருமலையில் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான டிக்கான் மீது தாக்குதல் நடத்தியது கடற்படையினர் தான். ஏனெனில் கடற்படையினர் வந்து இவர்களையும் கூட்டிச் சென்றனர். மட்டக்களப்பு பற்பொடி கம்பனியிலுள்ள படைபுலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியான குமாரசேன என்பவர் இராணுவ வாகனத்தில் ஏற்றிக் கொண்டு இரவு, மண்முனை ஐந்தாம் கட்டை எனும் இடத்திற்கு கொண்டு வந்தனர்.

அங்கே மண்முனை அதிரடிப் படையினரின்வாகனம் வந்தது. அதில் குமாரசேன என்னை ஏற்றி விட்டு ஒரு துப்பாக்கியைத் தந்து கொக்கட்டிச் சோலைக்குப் போய் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரைச் சுட்டு விட்டு வருமாறு கூறினார்.

அதிரடிப்படையினர்மண்முனைக்கு வந்ததும், மீன்பிடித் தோணிகளில் ஏற்றி என்னை கொக்கட்டிச் சோலைக்கு அனுப்பினார்கள். நான் விடுதலைப்புலிகளிடம் வந்து சேர்ந்தேன் என சர்வராசா தெரிவித்தார்.

## நட்வர்சிங்...

பதவி பறிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்திய அரசாங்கம் விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை நட்வர்சிங் வெளியுறவு அமைச்சர் பதவியிலிருக்க மாட்டார் எனவும், இவரது கடமைகளை பிரதமர் மன்மோகன்சிங் கவனித்துக் கொள்வார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சர் பதவியிலிருந்து நட்வர்சிங் நீக்கப்பட்டபோதும் தொடர்ந்தும் அமைச்சர் பதவியில் இருப்பார் எனவும் பிரதமர் வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியுடன் மிகவும் நெருக்கமானவரான நட்வர்சிங் தனக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்புமில்லையென மறுத்து வருகிறார். ஆனால் எதிர்க்கட்சிகள் இவரைப் பதவி நீக்கம் செய்யுமாறு வற்புறுத்தியதை அடுத்தே வெளியுறவு அமைச்சர் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.